# அரசாங்க சேவை ஆணைக்குழு

# வருடாந்த அறிக்கை

# 2013

இல. 177 , நாவல வீதி,

நாராஹேன்பிட்ட,

கொழும்பு 05.

**தொலைபேசி** - **011-2136600/ 011-2136650/ 011-2136700**

**தொலைநகல்** - **011-2369302/ 011-2369305**

**மின்னஞ்சல்** - **secretary@psc.gov.lk**

**இணையத்தளம்** - **www.psc.gov.lk**

எனது இல. : PSC/ADM/06/02/05/2013
அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம்,
இல. 177, நாவல வீதி,
நாராஹேன்பிட்ட,
கொழும்பு 05.

2014 யூலை மாதம் 07 ஆம் திகதி


செயலாளர் நாயகம்,
இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்.

ஐயா,

**<u>2013 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வருடாந்த அறிக்கை</u>**

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 55(5) உறுப்புரையின் பிரகாரம் 2013 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்குரிய ஆணைக்குழுவின் செயற்பாடுகள் பற்றிய அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய இத்துடன் தங்களுக்கு பணிவுடன் அனுப்பிவைக்கின்றேன்.

இப்படிக்கு,
உண்மையுள்ள



**ரீ.எம்.எல்.சீ. சேனாரத்ன**
**செயலாளர்,**
**அரசாங்க சேவை ஆணைக்குழு.**

## நோக்கு

தேசத்தின் மேம்பாட்டுக்காக அர்ப்பணிப்புடன் பணிபுரியும் அரசாங்க சேவை

## செயற்பணி

வினைத்திறன்மிக்க, ஒழுங்குமுறையான அரசாங்க சேவையை ஏற்படுத்தி விருத்தி செய்வதன் மூலம் பாரபட்சமற்ற, பகிரங்கத்தன்மையுள்ள, நிலையான சேவையை மக்களுக்கு வழங்கல்

## அரசாங்க சேவை ஆணைக்குழு அங்கத்தவர்கள்

### தவிசாளர்

வித்தியாஜோதி வைத்திய கலாநிதி திரு. தயாசிறி பெர்ணாந்து

### அங்கத்தவர்கள்

ஜனாதிபதி சட்டத்தரணி திரு. பாலித்த எம். குமாரசிங்ஹ

திருமதி சிறிமாவோ ஏ. விஜேரத்ன

திரு. எஸ்.சீ. மான்னப்பெரும

திரு. ஆனந்த செனவிரத்ன

திரு. என்.எச். பதிரண

திரு. எஸ். தில்லைநடராஜா

திரு. எம்.டீ.டபிள்யூ. ஆரியவன்ச

திரு. ஏ. மொஹமட் நஹியா

# பொருளடக்கம்


| தொடர் இல | | விடயம் | பக்கம் |
|---|---|---|---|
| 1 | அறிமுகம் | | 01 |
| 2 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வரலாற்று ரீதியான பயணப் பாதை | | 01 |
| 3 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள் | | 02 |
| | 3.1 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் தொடர்பில் வினவக் கூடிய சந்தர்ப்பங்கள் | 03 |
| 4 | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிகள் தொடர்பான பொது மீளாய்வு | | 03 |
| 5 | மீளாய்வுக்குரிய வருடத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் | | 07 |
| | 5.1 | தாபனப் பிரிவு | 07 |
| | 5.1.1 | தாபனப் பிரிவின் பணிகள் | 08 |
| | 5.1.2 | தாபனப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு (2013.01.01 - 2013.12.31) | 08 |
| | 5.1.3 | தாபனப் பிரிவு எதிர்நோக்கிய சவால்களை வெற்றிகொள்ள மற்றும் செயலாற்றுகையை அதிகரித்துக்கொள்ள எடுக்கப்பட்ட புதிய நடவடிக்கைகள் | 13 |
| | 5.2 | நியமனம், பதவி உயர்வுப் பிரிவு | 14 |
| | 5.2.1 | நியமனம், பதவி உயர்வுப் பிரிவின் பணிகள் | 14 |
| | 5.2.2 | நியமனம், பதவியுயர்வுப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு (2013.01.01 - 2013.12.31) | 15 |
| | 5.2.3 | 2013 ஆம் ஆண்டில் நியமனப் பிரிவின் பணிகள் தொடர்பான பொது மீளாய்வு | 16 |
| | 5.3 | ஒழுக்காற்றுப் பிரிவு | 24 |
| | 5.3.1 | ஒழுக்காற்றுப் பிரிவின் பணிகள் | 25 |
| | 5.3.2 | ஒழுக்காற்றுப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு (2013.01.01 - 2013.12.31) | 26 |
| | 5.3.3 | ஒழுக்காற்றுப் பிரிவின் செயலாற்றுகையை அதிகரித்துக்கொள் எடுக்கப்பட்ட புதிய நடவடிக்கைகள் | 27 |
| | 5.4 | மேன்முறையீட்டுப் பிரிவு | 28 |
| | 5.4.1 | மேன்முறையீட்டுப் பிரிவின் பணிகள் | 28 |
| | 5.4.2 | மேன்முறையீட்டுப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு (2013.01.01 - 2013.12.31) | 29 |
| | 5.4.3 | 2013 ஆம் ஆண்டில் மேன்முறையீட்டுப் பிரிவின் பணிகள் தொடர்பான பொது மீளாய்வு | 30 |
| | 5.5 | நிருவாகப் பிரிவு | 30 |
| | 5.6 | கணக்குப் பிரிவு | 31 |
| 6 | நிதி ஒதுக்கீடு | | 31 |
| 7 | பணியாட் தொகுதி | | 31 |
| | 7.1 | நிறுவனக் கட்டமைப்பு (பின்னிணைப்பு 03) | 31 |
| | 7.2 | பணியாட் தொகுதியின் அமைப்பு | 32 |
| | 7.3 | பணியாட் தொகுதிக்கான பயிற்சி நடவடிக்கைகள் | 32 |
| 8 | 2013 ஆம் ஆண்டில் ஒவ்வொருப் பிரிவினாலும் விளக்கங்கள் சமர்பிக்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை | | 33 |
| 9 | ஆணைக்குழு கூட்டங்கள் | | 33 |
| 10 | நன்றி நவிலல் | | 33 |
| 11 | பின்னிணைப்புக்கள் | | 35 - 39 |

## 01. அறிமுகம்

அரசியலமைப்பின் 18 ஆவது திருத்தத்தின் மூலம் திருத்தப்பட்ட 54(1) உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியால் நியமிக்கப்படுகின்ற ஒன்பது அங்கத்தவர்களுக்கு மேற்படாத அங்கத்தவர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது. இவ் அங்கத்தவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுவார். 2011.05.13 ஆம் திகதி தொடக்கம் இவ் ஆணைக்குழு நியமிக்கப்பட்டது. அரசியலமைப்பின் 55(5) உறுப்புரையின் ஏற்பாடுகளின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழு, 2013 சனவரி 01 ஆம் திகதி தொடக்கம் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரையிலான காலப்பகுதிக்காக தயாரிக்கப்படுகின்ற இவ்வறிக்கையை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும்.

## 02. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் வரலாற்று ரீதியான பயணப் பாதை

பிரித்தானியர்களின் காலணித்துவ ஆட்சிக் காலத்தில் 1946 மே மாதம் 15 ஆம் திகதிய இலங்கை (அரசியலமைப்பு) அரச பேரவைக் கட்டளையின் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழு தாபிக்கப்பட்டது. அதற்கிணங்க அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு, சேவையிலிருந்து நீக்குதல் தொடர்பான நிறைவேற்று அதிகாரங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டன.

1972 ஆம் வருடத்தில் முதலாவது குடியரசு அரசியலமைப்பின் கீழ் அதுவரை 26 வருட காலமாக சுதந்திரமாக இயங்கி வந்த அரசாங்க சேவை ஆணைக்குழு ஒழிக்கப்பட்டு அரசாங்க சேவை தொடர்பான அதிகாரங்கள் அமைச்சரவையிடம் கையளிக்கப்பட்டன.

1978 ஆம் வருடத்தில் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பின் கீழ் அரசாங்க சேவை ஆணைக்குழு மீள நிறுவப்பட்டது. அவ் ஆணைக்குழு மேன்முறையீட்டு அதிகாரியாக மாத்திரம் செயற்பட்டது. 1992 ஆம் வருடத்தில் அரசாங்க சேவையிலுள்ள பதவிநிலை உத்தியோகத்தர்களின் (சிரேஷ்ட உதவிச் செயலாளருக்கு மேலுள்ள பதவிகள் தவிர்ந்த) நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை, சேவையிலிருந்து நீக்குதல் தொடர்பான நிறைவேற்று அதிகாரங்கள் அமைச்சரவையினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டதற்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அவை நடைமுறைப்படுத்தப்பட்டன. ஆணைக்குழுவினால் அல்லது அதன் மூலம் தத்துவங்கள் கையளிக்கப்பட்ட குழுவொன்றினால் எடுக்கப்படுகின்ற தீர்மானங்களை மாற்றுவதற்கு, வேறுபடுத்துவதற்கு அல்லது இரத்துச் செய்வதற்கு வழிவகுக்கும் தத்துவங்கள் அமைச்சரவையினால் தொடர்ந்தும் நிறுத்தி வைத்துக்கொள்ளப்பட்டன.

2001 ஆம் வருடத்தில் 17 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக அரச சேவை தொடர்பாக அதுவரையும் இருந்து வந்த IX அத்தியாயம் நீக்கப்பட்டு புதியதோர் அத்தியாயம் சேர்க்கப்பட்டது. அதற்கிணங்க, அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசுக்கமைய ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்படுகின்ற 09 அங்கத்தவர்களுக்கு மேற்படாத அங்கத்தவர்களைக் கொண்ட அரசாங்க சேவை ஆணைக்குழு காணப்பட்டதுடன், அரசியலமைப்புப் பேரவையின் சிபாரிசின் பேரில் ஜனாதிபதி அவர்களினால் அவ் அங்கத்தவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்பட்டார். இத்திருத்தத்தினூடாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நிலை பாரிய மாற்றத்திற்கு உட்பட்டது. அதற்கமைய அரசியலமைப்பின் ஏற்பாடுகளுக்கு இணங்க அரசாங்க சேவையின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம்,

ஒழுக்காற்று நடவடிக்கை என்பன தொடர்பில் அமைச்சரவைக்கு உரித்தாக்கப்பட்டிருந்த தத்துவங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு உரித்தாக்கப்பட்டன. மேலும் இங்கு அரசாங்க சேவை ஆணைக்குழு பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளுக்கு அமைவாக பாராளுமன்றத்திற்கு வகை சொல்வதற்கும் பதில் கூறுவதற்கும் கட்டுப்பட்ட நிறுவனமாக மாற்றப்பட்டது.

2010 ஆம் வருடத்தில் 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தாபிதம் மற்றும் அதன் பணிகளுடனும் தொடர்புடைய விடயங்கள் திருத்தப்பட்டன. இவ் ஆணைக்குழு பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் பிரகாரம் பாராளுமன்றத்திற்கு பதில் அளிக்க வேண்டிய ஆணைக்குழுவாகும். 18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக திருத்தப்பட்ட 54(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியினால் நியமிக்கப்படுகின்ற ஒன்பது அங்கத்தவர்களுக்கு மேற்படாத அங்கத்தவர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு கொண்டுள்ளது. ஜனாதிபதி அவர்களினால் அவ் அங்கத்தவர்களுள் ஒருவர் ஆணைக்குழுவின் தவிசாளராக நியமிக்கப்படுவார். இவர்கள் மூன்று வருட காலப்பகுதிக்காக தமது பதவியை வகிப்பதுடன் தொடர்ந்தும் அவ்வாறான காலப்பகுதியொன்றிற்கு மீண்டும் நியமிக்கப்படுவதற்கு தகுதி பெறுகின்றனர்.

18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக திருத்தப்பட்டவாறான 55(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பான அனைத்து கொள்கை ரீதியான விடயங்களுக்கும் அமைச்சரவையினால் ஏற்பாடுகள் செய்யப்படுதல் வேண்டும். அரசிலமைப்பின் ஏற்பாடுகளுக்கு அமைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் உட்பட அரச உத்தியோகத்தர்களின் நியமனங்கள், பதவியுயர்வுகள், இடமாற்றம், ஒழுக்கக் கட்டுப்பாடு என்பன தொடர்பிலான தத்துவங்கள் ஆணைக்குழுவிற்கு உரித்தாக்கப்பட்டுள்ளன.

## 03. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள்

18 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தினூடாக உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பிரகாரம் தரைப்படை, கடற்படை மற்றும் விமானப் படை அங்கத்தவர்கள், மாகாண அரசாங்க சேவை ஆணைக்குழுக்களினால் நியமிக்கப்பட்ட மாகாண அரச உத்தியோகத்தர்கள், ஜனாதிபதி அவர்களினால் நியமிக்கப்பட்ட அமைச்சுச் செயலாளர்கள், அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட திணைக்களத் தலைவர்கள், நீதிச் சேவைகள் ஆணைக்குழுவினால் நியமிக்கப்பட்ட அட்டவணைப்படுத்தப்பட்ட உத்தியோகத்தர்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச்சட்ட சபைகள், அரசாங்கக் கம்பனிகள் ஆகிய நிறுவனங்களின் உத்தியோகத்தர்கள் தவிர்ந்த மாகாண சபைகளில் பணியாற்றும் அகில இலங்கை சேவையின் உத்தியோகத்தர்கள் மற்றும் பிற அனைத்து அரச உத்தியோகத்தர்களினதும்,

- நியமனம்
- பதவியுயர்வு
- இடமாற்றம்
- ஒழுக்கக் கட்டுப்பாடு, பதவி நீக்கம் செய்தல் என்பன அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

### 3.1 அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் தொடர்பில் வினவக் கூடிய சந்தர்ப்பங்கள்

கீழ்க் காணும் சந்தர்ப்பங்கள் தவிர ஆணைக்குழுவின் தீர்மானங்களை எந்தவொரு நீதிமன்றத்திலும் அல்லது நியாய சபையிலும் கேள்விக்குட்படுத்த முடியாது.

- அரசியலமைப்பின் 61அ உறுப்புரையின் பிரகாரம் 126 உறுப்புரையின் (1), (2), (3), (4) மற்றும் (5) ஆம் பந்திகளிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக அடிப்படை உரிமை சார்பில் உயர் நீதிமன்றத்தில் வழக்குத் தொடருதல்.
- அரசிலமைப்பின் 59(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் மற்றும் 2002 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைச் சட்டத்தினால் தாபிக்கப்பட்ட நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைக்கு மேன்முறையீடு செய்தல்.

## 04. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடவடிக்கைகள் தொடர்பான பொதுவான மீளாய்வு

2013 சனவரி மாதம் 01 ஆம் திகதி தொடக்கம் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரை இயங்கிய அரசாங்க சேவை ஆணைக்குழு இலங்கை வாழ் அனைத்து மக்களது நலன் பொருட்டும் தாய் நாட்டின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டும் கௌரவம் மிக்க அரச சேவையொன்றினை ஏற்படுத்தி முன்னெடுத்துச் செல்லும் உறுதிப்பாட்டுடன் தனது செயற்பாடுகளை வெளிப்படைத்தன்மையுடனும் நேர்மையாகவும் நிறைவேற்றியது.

அரசாங்க சேவையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவி உயர்வுகள் தொடர்பான பல்வேறுபட்ட சிக்கல்களை இல்லாதொழித்து தரமான அரசாங்க சேவையை பாதுகாக்கும் நோக்கத்துடன் பல்வேறுபட்ட தொழிற்துறைகளுக்கும் சேவைகளுக்குமுரிய ஆட்சேர்ப்புத் திட்டங்களையும் சேவை பிரமாணக் குறிப்புக்களையும் மிக ஆழமாக ஆராய்ந்து அரச சேவையின் வினைத்திறனையும் செயலாற்றுகையினையும் அதிகரிக்கும் நோக்கில் தேவையான திருத்தங்களைச் செய்து அவற்றிற்கான அங்கீகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்பட்டது. இவை தொடர்பாக பிரச்சினைகள் எழுந்த எல்லா சந்தர்ப்பங்களிலும் அமைச்சு செயலாளர்களையும் திணைக்களத் தலைவர்களையும் அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கு வரவழைத்து தவிசாளர், ஆணைக்குழு உறுப்பினர்கள், அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் உள்ளிட்ட சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்களை நடாத்தி அனைவரது கருத்தொருமைப்பாட்டுடனும் அப்பணிகள் துரிதமாக நிறைவு செய்யப்பட்டன.

அரசாங்க சேவையின் நிறைவேற்றுத் தர சேவைகளுக்குரிய பதவிகளுக்கான நியமனங்கள், பதவி உயர்வுகள் வழங்கும் போது கல்வி அறிவு, திறமை மற்றும் சேவை அனுபவம் என்பன கவணத்திற்கொள்ளப்பட்டு போட்டி அடிப்படையில் வெளிப்படைத்தன்மையுடன் தெரிவுகள் இடம்பெற்றன. மேலும் உரிய தருனத்தில் ஆட்சேர்ப்பு, பதவி உயர்வுகளை வழங்கி உத்தியோகத்தர்களின் செயலூக்கத்தை விருத்தி செய்யும் வகையில் கல்வி அறிவு, திறமை மற்றும் தொழிற் தகமைகள் மற்றும் சிறந்த உளப்பாங்குகள் கொண்ட இளைய சமூக மொன்றை அரசாங்க சேவைக்கு ஆட்சேர்ப்பு செய்வதற்கும் பதவிகளுக்கு பொருத்தமான உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும் பதவி உயர்வு வழங்குவதற்கும் உயர் தொழில் மட்டத்திலான அனுகுமுறை கையாளப்பட்டது.

அரசாங்க சேவையில் எதிர்பார்க்கப்படும் ஒழுக்க விழுமியங்கள் அலுவலர்களினால் மீறப்படும் சந்தர்ப்பங்களில் அவர்களுக்கெதிரான நடவடிக்கைகளை மேற்கொள்ளும்போது தேவையான அனைத்துவித தகவல்களையும் மிகவும் கவனமாகவும் ஆழமாகவும் பரிசீலனை செய்ததன் பின்னர் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் கட்டளைகள் வழங்கப்பட்டுள்ளன. ஆயினும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அரசாங்க அலுவலர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகளை மேற்கொள்கின்றபோது குறித்த ஒழுக்காற்று நடவடிக்கை தொடர்பாக அந்தந்த அமைச்சுக்களிலிருந்து, திணைக்களங்களிலிருந்து வேண்டப்படுகின்ற அவதானிப்புக்கள், விதப்புரைகள் மற்றும் அறிக்கைகள் அதிகமான சந்தர்ப்பங்களில் கிடைக்கப்பெறுவதில்லை. கிடைக்கப்பெறும் அறிக்கைகளும் சில சந்தர்ப்பங்களில் குறைபாடுடையனவாக காணப்பட்டன. இதன் காரணமாக ஒவ்வொரு அலுவலர் தொடர்பாகவும் ஏற்புடைய ஒழுக்காற்று விடயங்கள் தொடர்பாகவும் துரிதமாக செயற்பட்டு முடிவுகளை எடுப்பதற்கு பதிலாக சரியான அறிக்கைகள் கிடைக்கப்பெறும் வரையில் காத்திருக்கவேண்டிய நிலை ஏற்பட்டது. இதன் காரணமாக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வழங்கப்படும் இறுதி முடிவை தாமதப்படுத்த வேண்டியுள்ளது. (உதாரணம் :- ஒழுக்காற்றுக் காரணங்களுக்காக இடமாற்றம் செய்வதற்கு அல்லது பணித்தடை செய்வதற்கு சிபாரிசு செய்யப்பட்டுள்ள போதிலும் அதற்கு அடிப்படையாக அமைந்த காரணங்கள் எதனையும் தெளிவுபடுத்தாமையும் ஆரம்ப புலனாய்வு அறிக்கை அனுப்பப்படாமையும். ஆரம்ப புலனாய்வு அறிக்கை அனுப்பப்பட்ட போதிலும் பதிவுசெய்யப்பட்ட வாக்குமூலங்கள் மற்றும் / அல்லது கைது தொடர்பான ஆவணங்கள் / பொருட்கள் சமர்ப்பிக்கப்படாமை)

ஆணைக்குழுவுக்கு கிடைக்கப்பெறும் குறைபாடுடைய அறிக்கைகளில் விசேடமாக ஆரம்ப புலனாய்வு அறிக்கைகளை பரிசீலனை செய்யும் போது அரச ஒழுக்காற்று நடைமுறைகள் மற்றும் ஒழுக்காற்று செயல்முறை முகாமைத்துவம் தொடர்பான போதிய அறிவின்மையும் அதன் காரணமாக ஏற்படும் குறைபாடுகளும் அவதானிக்கப்பட்டன. அரசாங்க திணைக்களங்களில், அமைச்சுக்களில் ஒழுக்காற்று செயல்முறை முகாமைத்துவ விடயத்துக்கு பொறுப்பான அலுவலர்களுக்கு மாத்திரமாவது வருடாந்தம் முறையான தொடர் பயிற்சியொன்றை வழங்குவதன் மூலம் அக்குறைபாடுகளை நீக்கிக்கொள்ள முடியும் என்பதுடன் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தாமதத்தையும் அதன் மூலம் தவிர்க்க முடியும். அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்களை வரவழைத்து வருடாந்தம் நடாத்தப்படுகின்ற கூட்டத்தில் இது தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்ககுழுவினால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

பல்வேறுபட்ட நிலமைகளின் கீழ் அரச அலுவலர்கள் தமக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு செய்த மேன்முறையீடுகளை மிகவும் உன்னிப்பாக ஆராய்ந்து நீதி, நியாயத்தை நிலைநாட்டும் விதத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் வழங்கப்பட்டன. அதன் மூலம் அரசாங்க சேவையின் சகல மட்டங்களிலுமுள்ள உத்தியோகத்தர்களினாலும் முகம்கொடுக்க நேரிடும் சேவைப் பிரச்சினைகள் தொடர்பாக நியாயமான மேன்முறையீட்டுக்கான சந்தர்ப்பத்தை உறுதி செய்வதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

மீளாய்வுக்குரிய வருடத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயற்பாடுகள் தொடர்பாக அமைச்சு செயலாளர்களை, திணைக்களத் தலைவர்களை அழைத்து கலந்துரையாடல்களை நடாத்துவதனூடாக மாத்திரமன்றி அரசாங்க சேவை

ஆணைக்குழுவின் ஆலோசனைகள், சுற்றறிக்கைகள், இவ் அலுவலக பணிகள் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல்கள் என்பனவும் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் அனைவரது நலன் கருதி வழிகாட்டல்களை மற்றும் படிவங்களை இலகுவாக பெற்றுக்கொள்ளும் பொருட்டு அவை இனணயத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளன. மேலும் வருடாந்தம் நடைபெறும் அமைச்சுக்களின் மேலதிக செயலாளர்களின் மீளாய்வுக் கூட்டம் 2013 சனவரி மாதத்தில் நடைபெற்றது. அங்கு அவர்களின் பிரச்சினைகளை முன்வைப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டு அவர்களுடன் கலந்துரையாடி பிரச்சினைகளுக்கான தீர்வுகள் வழங்கப்பட்டன.

2013 ஆம் வருடத்தில் ஒட்டுமொத்த அரசாங்க சேவைக்குமென புதிய செயலாற்றுகை முகாமைத்துவ முறையொன்றை அமைப்பதற்கான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டன. அது சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழு, அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு, அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு, தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் முகாமைத்துவ பட்டப் பின் படிப்பு நிறுவனம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் தெற்காசிய அபிவிருத்தி கூட்டுச் செயற்பாட்டு ADB-Aus AID நன்கொடைத் திட்டம் என்பவற்றின் ஒத்துழைப்புடன் ஆரம்பிக்கப்பட்டது. அது தொடர்பாக ஒட்டுமொத்த அரசாங்க உத்தியோகத்தர்களையும் அறிவூட்டும் முகமாக 2013.07.11 ஆம் திகதி தேசிய மாநாடு ஒன்று கொழும்பில் நடாத்தப்பட்டது. அதன் பின்னர் 15 நிறுவனங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு பரீட்சார்த்த திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. 2014 ஆம் ஆண்டில் அதன் முன்னேற்றம் தொடர்பான மீளாய்வு செய்யப்படவுள்ளது. அதன் பின்பு ஒட்டு மொத்த அரசாங்க சேவைக்கும் அத்திட்டத்தை நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. 2013 ஆம் ஆண்டு இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது ஒரு முக்கிய மைற்கல்லாகும்.

பொது மனுக்குழுவுக்கு முன்வைக்கப்படும் முறைப்பாடுகள் தொடர்பாக அரசாங்க சேவை ஆணைக்குழு எப்போதும் தனது கருத்துக்களை முன்வைத்தது. மேலும் சகல விடயங்கள் தொடர்பாகவும் அரசாங்க சேவை ஆணைக்குழு தனது மேலான கவனத்தைச் செலுத்தி சட்டத்தின் வரையறைகளுக்குள்ளால் வழங்கமுடியுமான சகல நிவாரணங்களையும் வழங்குவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது. பொது மனுக்குழுவினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் சகல மக்கள் மனுக்களும் மிகவும் உன்னிப்பாக ஆராயப்பட்டு அவை தொடர்பான விரிவான அறிக்கைகள் பொது மனுக்குழுவுக்கு சமர்ப்பிப்பதற்கும் பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களில் அழைப்புவிடுக்கின்ற போது பொது மனுக்குழுவின் முன்னால் கருத்துக்களை முன்வைப்பதற்கு உத்தியோகத்தர்களை அனுப்புவதற்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்கப்பட்டது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் வரக்கூடிய நாளாந்தம் கிடைக்கப்பெறும் கடிதங்கள் மற்றும் ஆவணங்கள் முகாமைத்துவ கட்டமைப்பு ஒன்றின் ஊடாக கணினி மயப்படுத்தப்படுகின்றன. இங்கு கடிதம் தொடர்பான முக்கிய விடயங்கள் அனைத்தும் உள்ளடக்கப்படுவதோடு சகல கடிதங்களுக்கும் தனித்தனியான எண் ஒன்று வழங்கப்படுகின்றது.

உள்இணைப்பாக்கம் செய்யப்பட்ட கணினி கட்டமைப்பு ஒன்றினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சகல கணினிகளும் ஒன்றுடன் ஒன்று இணைக்கப்பட்டுள்ளன. எனவே அலுவலகத்திற்கு கிடைக்கப்பெறும் கடிதங்கள் இக்கட்டமைப்பு ஊடாக ஏற்புடைய பிரிவுகளுக்கு அனுப்பப்பட்டதன் பின்னர் ஒவ்வொரு கடிதம் தொடர்பாகவும்

எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை ஒவ்வொரு கட்டம் கட்டமாக நாளதுவரைப்படுத்த முடியும் என்பதோடு அதன் மூலம் ஏதேனுமொரு கடிதம் தொடர்பாக வினவும் ஒருவருக்கு ஆவண முகாமைத்துவ கட்டமைப்பை பயன்படுத்தி அந்த கடிதம் தொடர்பாக தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் பற்றிய தெளிவான பதிலொன்றை அளிக்க முடியும்.

திறைசேரி கட்டிடத் தொகுதியில் அமைந்திருந்த அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம் 1997 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதத்திலிருந்து இது வரை பல சந்தர்ப்பங்களில் ஏழு இடங்களில் கொண்டு நடாத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக தளபாடங்கள் மற்றும் அலுவலக உபகரணங்களை கொண்டு செல்வதற்கு அதிகமான செலவுகள் ஏற்பட்டுள்ளன. அத்தோடு அலுவலக கட்டிடத்தின் வாடகையாக பெருந்தொகைப் பணம் செலவிடப்பட்டுள்ளது. எனவே, 2013 ஆண்டு காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சுக்கு அண்மையிலுள்ள ஆ.வ இலக்கம் 9175 இன் துண்டு இலக்கம் 19 மற்றும் 20 இல் காட்டப்பட்டுள்ள 0.1770 ஹெக்டயார் விஸ்தீரணமுள்ள அரசுக்கு சொந்தமான காணி அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கு நிரந்தரக் கட்டிடம் ஒன்றை அமைப்பதற்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

அதற்கிணங்க, புதிய கட்டிடத்தை அமைப்பதற்கான மதிப்பீடான 670 மில்லியன் ரூபா ஒதுக்கீட்டுத் தொகைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றுள்ளதோடு, கட்டிட நிர்மாணப் பணிகளை கட்டிடத் திணைக்களத்தின் பூரண கண்காணிப்பின் கீழ் செயற்படுத்துவதற்கும் 2014 ஆம் ஆண்டின் முதல் தவணையில் பணிகளை ஆரம்பிப்பதற்கும் திட்டமிப்பட்டுள்ளது.

மேலும் தரப்படுத்தலுக்கான சர்வதேச அமைப்பின் ISO 9001: 2008 சர்வதேச தரத்திற்கு அமைய அரசாங்க சேவை ஆணைக்குழுவிள் தர முகாமைத்துவ ஒழுங்கமைப்பொன்றை நிறுவி பேணிவருவதற்கும் இந்த வருடத்தில் அத்தரச்சான்றிதழை பெற்றுக்கொள்வதற்கு தேவையான சகல நடவடிக்கைகளையும் முன்னெடுப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தினால் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கு நிறைவேற்றப்படும் சேவைகள் தொடர்பாக அவர்களுக்கு ஏற்புடைய தகவல்களை வழங்க விரிவான செயற்திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வெளியிடப்படும் சுற்றுநிருபங்கள்/அறிவித்தல்கள்/சட்ட ஏற்பாடுகள்/ஒழுங்கு விதிகள் தொடர்பான தகவல்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் இணையத்தளத்தில் சேர்க்கப்பட்டுள்ளதால் மிகவும் விரைவாகவும் சிறமமின்றியும் அத்தகவல்களைப் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

அவ்வாறே ஒவ்வொரு வாரத்திலும் புதன் கிழமை பொது மக்கள் தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அத்தினத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு வருகைதரும் உத்தியோகத்தர்களுக்கு அவர்களால் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பாக தற்போதைய நிலவரம் குறித்து தகவல்களை அறிந்துகொள்ள சந்தர்ப்பம் அளிக்கப்பட்டுள்ளது. அறிமுகப்படுத்தப்பட்டுள்ள முறையான படிவத்தை பூர்த்தி செய்து சமர்ப்பிப்பதன் மூலம் அன்றைய தினம் பொதுமக்கள் தினத்தை செயற்படுத்தும் ஏற்புடைய உதவிச் செயலாளரை சந்தித்து தேவையான தகவல்களைப் பெற்றுக்கொள்ள முடியும்.

அரசாங்க சேவை ஆணைக்குழு உத்தியோகத்தர்களின் நலன்புரி நடவடிக்கைகளுக்காகவும் விளையாட்டு, பொழுது போக்கு அம்சங்களுக்காகவும்

அலுவலக நலன்புரிச் சங்கத்தினால் பல்வேறுபட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. நலன்புரிச் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்படும் வருடாந்த சுற்றுலா, புத்தாண்டு விழாக் கொண்டாட்டம், வெசாக் அன்னதானம் வழங்கல் மற்றும் தங்களது கலைத் திறமைகளை வெளிப்படுத்தும் பாட்டுக் கச்சேரி போன்ற செயற்பாடுகள் இவ்வருடத்திலும் சிறப்பாக நடைபெற்றன.

## 05. மீளாய்வுக்குரிய வருடத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு அரசியலமைப்பினால் உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களை நிறைவேற்றுவதற்கு கீழ் வரும் பிரிவுகளினால் தேவையான பங்களிப்புக்கள் பெற்றுக்கொள்ளப்படுகின்றன.

- தாபனப் பிரிவு
- நியமன, பதவியுயர்வுப் பிரிவு
- ஒழுக்காற்றுப் பிரிவு
- மேன்முறையீட்டுப் பிரிவு
- நிருவாகப் பிரிவு
- கணக்குப் பிரிவு

### 5.1 தாபனப் பிரிவு

குடியரசு அரசியலமைப்பின் 61ஆ உறுப்புரையின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் வேறு விதத்தில் ஏற்பாடுகள் செய்யப்படும் வரை, அமுலாவது ஆரம்பமாகும் திகதியில் அரசாங்க சேவைக்குரியதாக செயலிலிருந்த அனைத்து விதிகள், ஒழுங்கு விதிகள், நடவடிக்கை முறை, அவ் அத்தியாயத்தின் கீழ் அரசாங்க சேவையுடன் தொடர்புடையதாக ஆக்கப்பட்ட அல்லது ஏற்பாடுகள் செய்யப்பட்ட விதிகள், ஒழுங்கு விதிகள், நடவடிக்கை முறை என்பவற்றில் தேவையான திருத்தங்களுடன் அமுலிலுள்ளதாக கருதப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன் பிரகாரம், அரசாங்க சேவையுடன் தொடர்புடைய விதிகள், ஒழுங்கு விதிகள், என்பவற்றுக்கான ஏற்பாடுகளை செய்யும் பணி அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தின் தாபனப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது.

தாபனப் பிரிவிற்காக அங்கீகரிக்கப்பட்ட பதவிகள் தொடர்பான விபரம் வருமாறு:

மேலதிக செயலாளர் - 01
சிரேஷ்ட உதவிச் செயலாளர் - 01
உதவிச் செயலாளர் - 04
முகாமைத்துவ உதவியாளர் - 08

### 5.1.1 தாபனப் பிரிவின் பணிகள்

- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குரிய அதிகாரங்கள், பொறுப்புகள், தத்துவங்கள் என்பவற்றைக் கையளிப்பது தொடர்பான பணிகள்.
- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகளை வகுத்தல், திருத்தங்களை மேற்கொள்ளல் மற்றும் வெளியிடுதல்.
- அரசாங்க சேவையின் நடைமுறை விதிகளை அடிப்படையாகக் கொண்ட ஆலோசனைத் தொகுதிகளைத் தயாரித்தலும் அவை தொடர்பில் தெளிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்தலும்.
- சுற்றறிக்கைகள், ஒழுங்குவிதிகள், அறிவுறுத்தல்கள் என்பவற்றை வெளியிடல்.
- அரசாங்க சேவையுடன் தொடர்புடைய சேவைப் பிரமாணக் குறிப்புக்கள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள் என்பவற்றை தயாரித்தலும் அவற்றில் திருத்தங்களைச் செய்தலும்.
- அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை விதிகள், சேவைப் பிரமாணக் குறிப்புக்கள், ஆட்சேர்ப்புத் திட்டங்கள், சுற்றறிக்கைகள், கட்டளைகள் என்பனவற்றிற்கு அப்பாற்பட்டு செயற்படும் சந்தர்ப்பங்களில் அது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளல்.
- நடைமுறை விதிகளில் உள்ளடக்கப்படாத விடயங்கள் தொடர்பில் பொருள்கோடல்.
- அரசாங்க சேவையுடன் தொடர்புடைய நடைமுறை விதிகளுக்கு அமைய தரவு முறைமையை விருத்தி செய்தல், இற்றைப்படுத்தல், பேணிவரல் மற்றும் தகவல்களை விநியோகித்தல்.
- அரசாங்க உத்தியோகத்தர்களின் இடமாற்றம் தொடர்பான நடவடிக்கை முறையை வகுத்தலும் திருத்தங்களை மேற்கொள்ளலும்.


### 5.1.2 தாபனப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு - (2013 சனவரி 01 ஆம் திகதி முதல் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரை)

மேற்சொன்ன காலப்பகுதியில் பின்வரும் விடயங்கள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

| | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | புதிய ஆட்சேர்ப்பு நடைமுறை | 231 |
| 2 | புதிய சேவைப் பிரமாணங்கள் | 10 |
| 3 | ஆட்சேர்ப்பு நடைமுறை திருத்தம் | 21 |
| 4 | சேவைப் பிரமாணங்கள் திருத்தம் | 10 |
| 5 | இடமாற்ற நடைமுறை | 6 |
| 6 | சுற்றறிக்கைகள் | 1 |
| 7 | விசேட சந்தர்ப்பங்களின் போது ஆட்சேர்ப்பு திட்டத்திற்கு | 16 |

| | | |
|---|---|---|
| | அப்பாற்பட்டு செயற்படுவதற்கு செய்யப்படுகின்ற கோரிக்கைகள் | |
| 8 | விசேட சந்தர்ப்பங்களின் போது சேவைப் பிரமாணக் குறிப்பிற்கு அப்பாற்பட்டு செயற்படுவதற்கு செய்யப்படுகின்ற கோரிக்கைகள் | 5 |
| 9 | அரசாங்க சேவை ஆணைக்குழு நடைமுறை விதிகளுடன் தொடர்புடைய விடயங்கள் | 2 |
| 10 | கொள்கைகள் தொடர்பான பணிகள் | 145 |
| 11 | பொதுவான விடயங்கள் | 73 |
| 12 | உயர்நீதிமன்றம், நிருவாக மேன்முறையீட்டு நியாயசபை, மேன்முறையீட்டு நீதிமன்றம் தொடர்பான விடயங்கள் | 8 |
| | **மொத்தம்** | 528 |

அட்டவணை இல. 01




படம் 01

## 2013.01.01- 2013.12.31 திகதி வரை அங்கீகாரம் வழங்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள்

| தொ. இல | அமைச்சு | அங்கீகரிக்கப்பட்டவை |
|---|---|---|
| 1 | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 7 |
| 2 | நிதி, திட்டமிடல் அமைச்சு | 5 |
| 3 | துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 0 |
| 4 | புத்த சாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு | 0 |
| 5 | நீர்பாசன மற்றும் நீர் வள முகாமைத்துவ அமைச்சு | 9 |
| 6 | சுகாதார அமைச்சு | 5 |
| 7 | பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சு | 1 |
| 8 | கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 5 |

| | | |
|---|---|---|
| 9 | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு | 1 |
| 10 | பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு | 0 |
| 11 | உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு | 0 |
| 12 | கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு | 1 |
| 13 | மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சு | 1 |
| 14 | நிர்மாணத்துறை,பொறியியல் சேவைகள்,வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சு | 8 |
| 15 | நீதி அமைச்சு | 10 |
| 16 | பொருளாதார அபிவிருத்தி அமைச்சு | 6 |
| 17 | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 6 |
| 18 | உயர் கல்வி அமைச்சு | 2 |
| 19 | வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு | 5 |
| 20 | அரசாங்க நிர்வாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 6 |
| 21 | பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு | 0 |
| 22 | தபால் சேவை அமைச்சு | 2 |
| 23 | தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 2 |
| 24 | சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திவள அமைச்சு | 12 |
| 25 | சிறுவர் அபிவிருத்தி மற்றும் பெண்கள் விவகார அமைச்சு | 5 |
| 26 | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 12 |
| 27 | கல்வி அமைச்சு | 3 |
| 28 | பெருந்தோட்ட கைத்தொழில் அமைச்சு | 1 |
| 29 | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சு | 6 |
| 30 | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 12 |
| 31 | சமூக சேவைகள் அமைச்சு | 0 |
| 32 | விளையாட்டுத்துறை அமைச்சு | 3 |
| 33 | கமத்தொழில் அமைச்சு | 9 |
| 34 | மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சு | 16 |
| 35 | போக்குவரத்து அமைச்சு | 4 |
| 36 | இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 18 |
| 37 | கூட்டுறவு மற்றும் உள்நாட்டு வர்த்தக அமைச்சு | 1 |
| 38 | புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 2 |
| 39 | சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 7 |
| 40 | சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு | 9 |
| 41 | வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு மற்றும் நலன்புரி அமைச்சு | 1 |
| 42 | சிவில் விமான சேவை அமைச்சு | 1 |
| 43 | தெங்கு அபிவிருத்தி மற்றும் மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சு | 0 |
| 44 | கலை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு | 1 |
| 45 | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 3 |
| 46 | வன சீவராசிகள் வளப் பாதுகாப்பு அமைச்சு | 1 |

| | | |
|---|---|---|
| 47 | மீள்குடியேற்ற அமைச்சு | 1 |
| 48 | மக்கள் உறவுகள் மற்றும் மக்கள் அலுவல்கள் அமைச்சு | 0 |
| 49 | தனியார் போக்குவரத்து சேவை அமைச்சு | 0 |
| 50 | அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு | 1 |
| 51 | தொலை தொடர்பு மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சு | 0 |
| 52 | தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 6 |
| 53 | உற்பத்தித்திறன் ஊக்குவிப்பு அமைச்சு | 0 |
| 54 | அரச முகாமைத்துவ மறுசீரமைப்பு அமைச்சு | 0 |
| 55 | கணக்காய்வாளர் திணைக்களம் | 2 |
| 56 | சனாதிபதி செயலகம் | 1 |
| 57 | பிரதமர் அலுவலகம் | 2 |
| 58 | தாவரப் பூங்கா மற்றும் பொது பொழுதுபோக்கு அமைச்சு | 5 |
| 59 | அமைச்சரவை அலுவலகம் | 0 |
| 60 | இலஞ்சம், ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு | 0 |
| 61 | சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு | 4 |
| | மொத்தம் | 231 |

*அட்டவணை இல 02*

## 2013 ஆம் ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்கள்.

1. கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சில் SL – 01 பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
2. போக்குவரத்து அமைச்சின் SL – 01 சட்ட அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்(வயதெல்லை திருத்தம்)
3. கலை கலாசார அமைச்சின் PL – 02 – 2006A பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
4. மீள்குடியேற்ற அமைச்சின் படக்காட்சி புகைப்பட இயக்குனர் உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
5. மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சின் SL – 01 உதவிப் பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
6. தபால் திணைக்களத்தின் PL – 03 – 2006A சாரதி பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
7. போக்குவரத்து அமைச்சின் SL – 01 சட்ட அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்(புள்ளி வழங்கல் திட்ட திருத்தம்)
8. சுற்றாடல் அமைச்சின் SL – 01 உதவிப் பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
9. கல்வி அமைச்சின் SL – 01 சட்ட அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
10. சட்ட வரைஞர் திணைக்களத்தின் MN – 01 – 2006A ஆவண உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
11. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தின் PL – 01 – 2006A கால்நடை கட்டுப்பாட்டு உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
12. சுகாதார அமைச்சின் MN – 05 – 2006A ஊட்டச்சத்தாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
13. சுகாதார அமைச்சின் MN – 01 – 2006A விடுதிப் பொருப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
14. சமூக சேவைகள் அமைச்சின் MT – 01 – 2006A தொழில் போதனாசிரியர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்

15. பௌத்த விவகார திணைக்களத்தின் SL – 01 சட்ட அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
16. இந்து சமய அலுவல்கள் திணைக்களத்தின் PL – 01 – 2006A பாதுகாப்பு ஊழியர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
17. தொழில் திணைக்ளத்தின் MN – 01 – 2006 A சுருக்கெழுத்தாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
18. தொழில் திணைக்ளத்தின் SL – 01- பிரதி ஆணையாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
19. கமநலசேவைகள் திணைக்களத்தின் MN – 01 – 2006A விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
20. மீன்பிடி மற்றும் நீர் வளங்கள் திணைக்களத்தின் SL – 01 பணிப்பாளர்/உதவிப் பணிப்பாளர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்
21. தொழில் திணைக்களத்தின் SL – 01 சட்ட அலுவலர் பதவிக்கான ஆட்சேர்ப்புத் திட்டம்

## 2013 ஆம் ஆண்டுக்குரிய அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றுநிருபங்கள்

1. 01/2013 - ஆட்சேர்ப்புத் திட்டங்களில் மற்றும் சேவைப் பிரமாணக் குறிப்புக்களில் குறிப்பிடப்பட்டுள்ள விசேட செயலாற்றுகையின் கீழ் பதவி உயர்வு வழங்கல் தொடர்பான ஏற்பாடுகளை தீர்மானித்தல்

## 2013 ஆண்டு திருத்தம் செய்யப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்புக்கள்

1. தாதியர் சேவை பிரமாணக் குறிப்பு - இரு முறை திருத்தப்பட்டுள்ளது
2. நில அளவை கள உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பு
3. அலுவலக பணிகள் உதவியாளர் சேவை பிரமாணக் குறிப்பு - இரு முறை திருத்தப்பட்டுள்ளது.
4. இலங்கை இறைவரிச் சேவை பிரமாணக் குறிப்பு
5. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை பிரமாணக் குறிப்பு
6. கட்டிடக் கலைஞர் சேவை பிரமாணக் குறிப்பு
7. ஒன்றிணைந்த சாரதிகள் சேவை பிரமாணக் குறிப்பு
8. விவசாய சேவை பிரமாணக் குறிப்பு

## 2013 ஆண்டு அங்கீகரிக்கப்பட்ட இடமாற்ற நடைமுறைகள்

1. இலங்கை நிர்வாக சேவை (விசேட தரம்) இடமாற்ற நடைமுறை
2. கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவைகள் திணைக்கள இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் இடமாற்ற நடைமுறை
3. இலங்கை அதிபர் சேவை இடமாற்ற நடைமுறை
4. கமநல சேவை திணைக்களத்தின் இலங்கை தொழில்நுட்பவியல் சேவையின் இடமாற்ற நடைமுறை
5. தேசிய ஒருமைப்பாட்டு இணைப்பாளர் மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு ஊக்குவிப்பு உதவியாளர்களின் இடமாற்ற நடைமுறை
6. ஆயுர்வேத சமூக சுகாதார மருத்துவ அதிகாரிகளின் சேவை இடமாற்ற நடைமுறை

## 2013.01.01ஆம் திகதி தொடக்கம் 2013.12.31 ஆம் திகதி வரை அங்கீகரிக்கப்பட்ட சேவை பிரமாணக் குறிப்புக்கள்

1. அரச முகாமைத்துவ உதவியாளர் சேவை
2. இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை
3. இலங்கை தொழில்நுட்பவியல் சேவை
4. இலங்கை விஞ்ஞான சேவை
5. ஒன்றிணைந்த சாரதிகள் சேவை
6. இலங்கை விவசாய சேவை
7. இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை
8. இலங்கை பொதுக் கல்வி ஆசிரியர் சேவை
9. இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை
10. இலங்கை மருத்துவ சேவை

### 5.1.3 தாபனப் பிரிவு எதிர்கொண்ட சவால்களை வெற்றிகொள்ள மற்றும் செயலாற்றுகையை அதிகரிக்க முன்னெடுக்கப்பட்ட புதிய நடவடிக்கைகள்

அ) ஆட்சேர்ப்பு திட்டங்கள், சேவை பிரமாணக் குறிப்புக்கள் தொடர்பாக பணியாற்றும் போது எழுகின்ற பிரச்சினைகளை பற்றி கலந்துரையாடுவதற்கு ஏற்புடைய நிறுவனங்களின் அதிகாரிகளுடன் தேவையான சந்தர்ப்பங்களில் கூட்டங்களை நடாத்தி தீர்வுகளைப் பெறுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

ஆ) தாபனப் பிரிவினால் அங்கீகரிக்கப்பட்டு உறுதிப்படுத்தப்பட்ட சகல ஆட்சேர்ப்புத் திட்டங்களையும் சேவைப் பிரமாணக் குறிப்புக்களையும் ஏனைய பிரிவுகளின் பாவனைக்காக ( ஸ்கேன் செய்யப்பட்டு Knowledge Share Folder இல் சேர்த்தல்)

இ) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்படும் திருத்தப்படவேண்டிய ஆட்சேர்ப்புத் திட்டங்களின் மென்பொருள் ஆவணங்களை பெற்று மேலும் அவற்றில் தேவையான திருத்தங்களைச் செய்து அவற்றுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகாரம் பெறப்பட்ட பின்னர் மின்னஞ்சல் ஊடாக திருத்தப்பட்ட மென்பொருள் ஆவணங்களை ஏற்புடைய திணைக்களங்கள்/ அமைச்சுக்களுக்கு அனுப்பி வைத்தல்.

உ) ISO – தரச் சான்றிதழைப் பெற்றுக்கொள்ளும் வேலைத்திட்டத்தின் கீழ் அவ்வப்பணிகளுக்கான தரத் திட்டங்களை வகுத்தல். அங்கு குறிப்பிடப்படும் கால எல்லைக்குள் ஏற்புடைய பணிகளை நிறைவேற்றுமாறு உத்தியோகத்தர்களுக்கு அறிவூட்டல்.

இப்பணிகளை நிறைவேற்றும் போது எதிர்நோக்கிய சவால்கள்

அ) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நடைமுறை ஒழுங்கு விதிகளுக்கு அமைய அரசாங்க உத்தியோகத்தர்களின் தகவல்களை சேகரிக்கும் பணியானது வழமையான பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள முகாமைத்துவ உதவியாளர்களைக் கொண்டு நிறைவேற்றிக்கொள்ள வேண்டியிருந்ததால் அவர்களது அன்றாடப் பணிகளில் இருந்த வேலைப்பலு காரணமாக அப்பணி பூரணப்படுத்தப்படவில்லை.

## 5.2 நியமனம், பதவியுயர்வுப் பிரிவு

2011.11.25 ஆம் திகதிய 1733/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டுள்ள அமைச்சரவையின் கட்டளைப் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள் கையளிக்கப்படாத அரசாங்க உத்தியோகத்தர்கள் (அமைச்சுச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், மாகாண அரச சேவை உத்தியோகத்தர்கள், நீதிச் சேவை உத்தியோகத்தர்கள் நீங்கலாக) தொடர்பில் காணப்படுகின்ற நியமனங்கள், பதவியுயர்வுகள் தொடர்பில் கீழ்க் காணும் பணிகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் நியமன, பதவியுயர்வு பிரிவினால் நிறைவேற்றப்படுகின்றது. இப் பிரிவு கீழ்க் காணும் உத்தியோகத்தர்களைக் கொண்டு காணப்படுகின்றது.

| | |
|---|---|
| சிரேஷ்ட உதவிச் செயலாளர் | - 02 |
| உதவிச் செயலாளர் | - 09 |
| நிருவாக உத்தியோகத்தர் | - 01 |
| முகாமைத்துவ உதவியாளர் | - 23 |

### 5.2.1 நியமனம், பதவியுயர்வுப் பிரிவின் பணிகள்

நியமன மற்றும் பதவியுயர்வுப் பிரிவின் பணிகள் கீழ் விபரிக்கப்பட்டவாறு இரு பிரதான பிரிவுகளின் கீழ் மேற்கொள்ளப்படுகின்றன.

#### I. நியமனங்கள்

அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணங்கள்/ஆட்சேர்ப்பு / பதவியுயர்வு நடைமுறைகளின் பிரகாரம் ஆட்சேர்ப்புச் செய்தல், சேவையில் நிரந்தரமாக்கல், சேவையை முடிவுறுத்தல், முதலில் வகித்த பதவிக்கு மீள நியமித்தல், பதில்/கடமைகளை நிறைவேற்றும் அடிப்படையில் நியமித்தல், சேவையிலிருந்து விடுவித்தல் (நிரந்தர/தற்காலிக அடிப்படையில்), ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்புச் செய்தல், சேவையிலிருந்து இராஜினாமாச் செய்தல், சேவைக்கு/பதவிக்கு மீள நியமித்தல், ஓய்வுபெறச் செய்தல் (30/88 ஆம் இலக்கப் பொது நிருவாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் விருப்புத் தெரிவின்/கட்டாய/மருத்துவக் காரணிகளின் அடிப்படையில்), ஓய்வுபெற்ற அரச உத்தியோகத்தர்களை ஒப்பந்த அடிப்படையில் மீளச் சேவையில் அமர்த்தல், சேவைப் பிரமாணக் குறிப்புகளில் அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளுக்கு (ஏற்புடைய சந்தர்ப்பங்களில்) நியமித்தல்.

#### II. பதவியுயர்வுகள்

அங்கீகரிக்கப்பட்ட சேவைப் பிரமாணக் குறிப்பு/ஆட்சேர்ப்பு திட்டத்தின் பிரகாரம் பதவியுயர்த்தல் (ஒரு தரத்திலிருந்து இன்னொரு தரத்திற்கு/ சேவை மூப்பு மற்றும் திறமை அடிப்படையில்), பதவிகளுக்கு நியமித்தல் (சேவை மூப்பு/ கட்டமைக்கப்பட்ட நேர்முகப் பரீட்சைகளின் பெறுபேறுகளின் அடிப்படையில்).


மேற்சொன்ன பணிகள் தொடர்பில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் விதிக்கப்பட்டுள்ள கட்டளைகளுக்கு/தீர்மானங்களுக்கு எதிராக நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையில் தொடுக்கப்பட்டுள்ள வழக்குகள்

தொடர்பிலும் உயர் நீதிமன்றத்திலும் மேன்முறையீட்டு நீதிமன்றத்திலும் தொடுக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் தொடர்பிலும் செயற்படுதல்.

### 5.2.2 நியமன, பதவி உயர்வுப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு - 2013 சனவரி 01 ஆம் திகதி முதல் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரை

| | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | ஓய்வு பெறுகை | 778 |
| 2. | நிரந்தரமாக்கல் | 2153 |
| 3. | ஆட்சேர்ப்பு | 2201 |
| 4. | ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு பதவியுயர்வு | 1506 |
| 5. | தேர்வு அடிப்படையிலான பதவியுயர்வு | 619 |
| 6. | ஒப்பந்த அடிப்படையில் மீள நியமித்தல் | 616 |
| 7. | ஒப்பந்த நியமனங்கள் | 23 |
| 8. | வினைத்திறன் காண் தடை தொடர்பான தீர்மானங்கள் | 1638 |
| 9. | பதில் கடைமை / கடமை நிறைவேற்றல் நியமனங்கள் | 612 |
| 10. | விடுவித்தல் | 161 |
| 11. | சேவையிலிருந்து விலகல் | 43 |
| 12. | பதவிகளுக்கு நியமித்தல் | 344 |
| 13 | உள்ளீர்ப்புச் செய்தல் | 1471 |
| 14 | மேன்முறையீடுகள் | 348 |
| | **மொத்தம்** | **12513** |

*அட்டவணை இல. 03*




*படம் 02*

**மீளாய்வுக்குரிய வருடத்திற்குள் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்ட நீதிமன்ற வழக்குகள்**

| வழக்குகள் | மொத்தம் |
|---|---|
| உயர் நீதிமன்ற வழக்குகள் | 75 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள் | 16 |
| நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை வழக்குகள் | 144 |

### 5.2.3 2013 ஆம் ஆண்டில் நியமன மற்றும் பதவி உயர்வுப் பிரிவின் பணிகள் தொடர்பான பொதுவான மீளாய்வு

அரசாங்க சேவையில் உயர் மட்ட பதவிகளுக்கு/தரங்களுக்கு நியமனம் செய்யும்போது/பதவி உயர்த்தும் போது ஏற்புடைய உத்தியோகத்தர்களின் கல்வி மற்றும் தொழில் தகைமைகளோடு பதவிகளில் கடமைப் புரிந்துள்ள அனுபவத்தின் மீது விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அதன் மூலம் பொருத்தமான உத்தியோகத்தர்களை ஏற்புடைய பதவிகளுக்கு தேர்ந்தெடுப்பதற்கான சந்தர்ப்பம் கிட்டியுள்ளது. அத்தேர்வுகளை நியாயமான மற்றும் வெளிப்படைத்தன்மையுடன் செய்வதற்காக வேண்டி நேர்முகப் பரீட்சைகளின் போது தேர்வு நியதிகள் உட்படுத்தப்பட்ட புள்ளி வழங்கல் திட்டங்களுக்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அங்கீகாரம் வழங்கப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு முன்னர் உத்தியோகத்தர்கள்/ விண்ணப்பதாரிகளுக்கு கிடைக்கச் செய்யுமாறு அமைச்சுச் செயலாளர்கள்/ நிறுவனத் தலைவர்கள் ஆகியோருக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

சில அமைச்சுக்கள் மற்றும் ஏனைய அரசாங்க நிறுவனங்களிலிருந்து தகவல்களைப் பெறுவதில் உள்ள தாமதத்தை குறைப்பதற்கு ஞாபகமூட்டல் கடிதங்களுக்கு மேலதிகமாக அந்நிறுவனங்களின் உத்தியோகத்தர்களை தொலைபேசி ஊடாக தொடர்புகொண்டு தேவையான தகவல்களை உரிய நேரத்திற்கு சமர்ப்பிக்காமல் இருப்பதனால் உத்தியோகத்தர்களுக்கு/ விண்ணப்பதாரர்களுக்கு ஏற்படக்கூடிய அநீதிகள் தொடர்பாக அறிவூட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன் மூலம் அத்தகைய நிறுவனங்களிலிருந்து தாமதமின்றி தகவல்களைப் பெற்று நியமனங்கள் மற்றும் பதவி உயர்வுகளை விரைவாக வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

சிக்கலான சந்தர்ப்பங்களில் ஏற்புடைய அமைச்சு செயலாளர்கள் மற்றும் திணைக்களத் தலைவர்களை அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்திற்கு அழைத்து அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தவிசாளர் உள்ளிட்ட உறுப்பினர்கள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளர் உள்ளிட்ட சிரேஷ்ட பதவிநிலை உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடி எந்த தரப்பினருக்கும் பாதகம் ஏற்படாத வகையில் நடைமுறையிலுள்ள சட்ட வரையறைகளுக்குள் கருத்தொருமைப்பட்டு அப்பிரச்சினைகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

## சாதாரண ஓய்வு பெறுகை

| | | |
|---|---|---|
| 1. | கல்வி அமைச்சு | 157 |
| 2. | இலஞ்சம், ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு | 1 |
| 3. | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 22 |
| 4. | நிர்மாணத்துறை,பொறியியற் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொ.வ. அமைச்சு | 3 |
| 5. | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 6 |
| 6. | கமத்தொழில் அமைச்சு | 39 |
| 7. | கமநல சேவை மற்றும் வன சீவராசிகள் அமைச்சு | 5 |
| 8. | மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சு | 4 |
| 9. | சனாதிபதி அலுவலகம் | 4 |
| 10. | தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 2 |
| 11. | தபால் சேவைகள் அமைச்சு | 2 |
| 12. | சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 25 |
| 13. | சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு | 6 |
| 14. | போக்குவரத்து அமைச்சு | 12 |
| 15. | கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 9 |
| 16. | புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 8 |
| 17. | நிதி, திட்டமிடல் அமைச்சு | 140 |
| 18. | இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 27 |
| 19. | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 16 |
| 20. | அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 149 |
| 21. | துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 1 |
| 22. | நீர்பாசன அமைச்சு | 2 |
| 23. | கணக்காய்வாளர் திணைக்களம் | 4 |
| 24. | வெளிவிவகார அமைச்சு | 7 |
| 25. | கூட்டுறவு அமைச்சு | 1 |
| 26. | சிறு ஏற்றுமதிப் பயிர்கள் ஊக்குவிப்பு அமைச்சு | 1 |
| 27. | சுகாதார அமைச்சு | 124 |
| 28. | சிறுவர் அபிவிருத்தி அமைச்சு | 1 |
| | **மொத்தம்** | **778** |

## நிரந்தரமாக்கல்

| | | |
|---|---|---|
| 1. | நீதி அமைச்சு | 1 |
| 2. | இலஞ்சம், ஊழல் பற்றிய சாத்துதல்களைப் புலனாய்வு செய்யும் ஆணைக்குழு | 2 |
| 3. | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 5 |
| 4. | கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு | 1 |
| 5. | விவசாய சேவை | 12 |
| 6. | கமத்தொழில் அமைச்சு | 19 |
| 7. | சனாதிபதி செயலகம் | 3 |
| 8. | மதிப்பீட்டுச் சேவை | 14 |
| 9. | சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 13 |
| 10. | கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு | 1 |
| 11. | பிரதி மதுவரி ஆணையாளர் | 6 |
| 12. | கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 12 |

| | | |
|---|---|---|
| 13. | இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 8 |
| 14. | அரச சட்டவாதி | 2 |
| 15. | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 45 |
| 16. | கட்டிடக் கலைஞர் சேவை | 8 |
| 17. | அதிபர் சேவை | 2 |
| 18. | வெளிநாட்டுச் சேவை | 5 |
| 19. | இலங்கை மருத்துவ சேவை | 1120 |
| 20. | இலங்கை விஞ்ஞான சேவை | 13 |
| 21. | இலங்கை கல்வி நிருவாக சேவை | 190 |
| 22. | இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை | 194 |
| 23. | இலங்கை பொறியியல் சேவை | 26 |
| 24. | இலங்கை திட்டமிடல் சேவை | 244 |
| 25. | இலங்கை கணக்காளர் சேவை | 41 |
| 26. | இலங்கை நிருவாக சேவை | 93 |
| 27. | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | 6 |
| 28. | இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை | 26 |
| 29. | உதவி பொலிஸ் அத்தியட்சகர் | 39 |
| 30. | சுகாதார அமைச்சு | 2 |
| | **மொத்தம்** | **2153** |

## ஆட்சேர்ப்பு

| | | |
|---|---|---|
| 1. | நீதி அமைச்சு | 1 |
| 2. | சிரேஷ்ட அரச சட்டவாதி | 2 |
| 3. | தேசிய மரபுரிமைகள் அமைச்சு | **1** |
| 4. | மதிப்பீட்டுத் திணைக்களம் | 2 |
| 5. | சட்டமா அதிபர் திணைக்களம் | 23 |
| 6. | போக்குவரத்து அமைச்சு | 12 |
| 7. | கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 1 |
| 8. | சுங்க அத்தியட்சகர் | 28 |
| 9. | நீர்பாசன அமைச்சு | 1 |
| 10. | கட்டிடக்கலைஞர் சேவை | 10 |
| 11. | கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் | 2 |
| 12. | பல் அறுவை சிகிச்சை மருத்துவர் | 90 |
| 13. | இலங்கை வெளிநாட்டுச் சேவை | 28 |
| 14. | இலங்கை மருத்துவ சேவை | 1054 |
| 15. | இலங்கை ஆயுர்வேத மருத்துவச் சேவை | 182 |
| 16. | இலங்கை கல்வி நிருவாக சேவை | 29 |
| 17. | இலங்கை திட்டமிடல் சேவை | 171 |
| 18. | இலங்கை விவசாய சேவை | 117 |
| 19. | இலங்கை தொழில்நுட்ப கல்வி சேவை | 29 |
| 20. | இலங்கை கணக்காளர் சேவை | 198 |
| 21. | இலங்கை நிருவாக சேவை | 114 |
| 22. | இலங்கை கணக்காய்வுச் சேவை | 51 |
| 23. | இலங்கை கால்நடை உற்பத்தி மற்றும் சுகாதார சேவை | 28 |
| 24. | கூட்டுறவு உதவி ஆணையாளர் | 2 |

| | | |
|---|---|---|
| 25. | குடிவரவு, குடியகல்வு உதவி ஆணையாளர் | 3 |
| 26. | உதவி பொலிஸ் அத்தியட்சகர் | 8 |
| 27. | உதவி சிறைச்சாலை அத்தியட்சகர் | 4 |
| 28. | உதவி வெடிமருந்து கட்டுப்பாளர் | 10 |
| | **மொத்தம்** | **2201** |

## ஒரு தரத்திலிருந்து இன்னுமொரு தரத்திற்கு பதவியுயர்வு

| | | |
|---|---|---|
| 1. | கைத்தொழில் மற்றும் வணிகம் பற்றிய அமைச்சு | 1 |
| 2. | மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சு | 1 |
| 3. | பல் அறுவை சிகிச்சை மருத்துவ அதிகாரி | 35 |
| 4. | போக்குவரத்து அமைச்சு | 1 |
| 5. | பொலிஸ் அத்தியட்சகர் | 2 |
| 6. | நீர்பாசன அமைச்சு | 4 |
| 7. | கட்டிடக்கலைஞர் சேவை | 1 |
| 8. | கணக்காய்வுச் சேவை | 1 |
| 9. | வெளிநாட்டுச் சேவை | 11 |
| 10. | இலங்கை மருத்துவ சேவை | 892 |
| 11. | இலங்கை விஞ்ஞான சேவை | 13 |
| 12. | இலங்கை கல்வி நிருவாக சேவை | 29 |
| 13. | இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை | 41 |
| 14. | இலங்கை பொறியியற் சேவை | 33 |
| 15. | இலங்கை திட்டமிடல் சேவை | 67 |
| 16. | இலங்கை தொழில்நுட்பக் கல்வி சேவை | 8 |
| 17. | இலங்கை விவசாய சேவை | 7 |
| 18. | இலங்கை கணக்காளர் சேவை | 152 |
| 19. | இலங்கை தொழில்நுட்ப சேவை | 4 |
| 20. | இலங்கை பொலிஸ் சேவை | 48 |
| 21. | இலங்கை நிருவாக சேவை | 85 |
| 22. | இலங்கை நில அளவையாளர் சேவை | 4 |
| 23. | இலங்கை கட்டிடக் கலைஞர் சேவை | 1 |
| 24. | இலங்கை கணக்காய்வு சேவை | 38 |
| 25. | இலங்கை சுங்கத் திணைக்களம் | 16 |
| 26. | சுகாதார அமைச்சு | 3 |
| 27. | பதிவு செய்யப்பட்ட மருத்துவ உத்தியோகத்தர் | 8 |
| | **மொத்தம்** | **1506** |

## தேர்வு அடிப்படையிலான பதவியுயர்வுகள்

| | | |
|---|---|---|
| 1. | மேலதிக செயலாளர் | 4 |
| 2. | நீதி அமைச்சு | 4 |
| 3. | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 1 |
| 4. | கல்வி அமைச்சு | 2 |
| 5. | கமநல சேவை மற்றும் வன சீவராசிகள் அமைச்சு | 1 |

| | | |
|---|---|---|
| 6. | தொகைமதிப்பு மற்றும் புள்ளி விபரத் திணைக்களம் | 1 |
| 7. | மதிப்பீட்டுத் திணைக்களம் | 3 |
| 8. | தபால் சேவை திணைக்களம் | 14 |
| 9. | பிரதி பொலிஸ்மா அதிபர் | 18 |
| 10. | பிரதி இரசாயனப் பகுப்பாய்வாளர் | 2 |
| 11. | பிரதி சுங்கப் பணிப்பாளர் | 49 |
| 12. | போக்குவரத்து அமைச்சு | 12 |
| 13. | புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு | 7 |
| 14. | நீர்பாசன அமைச்சு | 12 |
| 15. | உதவி கணக்காய்வாளர் அதிபதி | 20 |
| 16. | விசேட மருத்துவ நிபுணர் | 61 |
| 17. | இலங்கை கல்வி நிருவாக சேவை | 24 |
| 18. | இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவை | 19 |
| 19. | இலங்கைதொழில்நுட்பவியல் சேவை | 46 |
| 20. | இலங்கை நிர்வாக சேவை | 48 |
| 21. | இலங்கை நில அளவை சேவை | 10 |
| 22. | இலங்கை சுங்கத் திணைக்களம் | 1 |
| 23. | இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை | 173 |
| 24. | சுகாதார அமைச்சு | 87 |
| | **மொத்தம்** | **619** |

## ஒப்பந்த அடிப்படையில் மீள சேவைக்கு அமர்த்தல்

| | | |
|---|---|---|
| 1. | மேலதிக செயலாளர் | 2 |
| 2. | பிரதமர் அலுவலகம் | 3 |
| 3. | நீதி அமைச்சு | 9 |
| 4. | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 70 |
| 5. | நிர்மாணத்துறை,பொறியியற் சேவைகள்,வீமைப்பு மற்றும் பொ.வ. அமைச்சு | 2 |
| 6. | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 14 |
| 7. | கமத்தொழில் அமைச்சு | 2 |
| 8. | மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சு | 5 |
| 9. | தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 1 |
| 10. | தபால் சேவை அமைச்சு | 14 |
| 11. | சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 14 |
| 12. | சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு | 2 |
| 13. | போக்குவரத்து அமைச்சு | 158 |
| 14. | கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 1 |
| 15. | புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு | 2 |
| 16. | நிதி, திட்டமிடல் அமைச்சு | 1 |
| 17. | இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 4 |
| 18. | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 11 |
| 19. | அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 151 |
| 20. | சுகாதார அமைச்சு | 150 |
| | **மொத்தம்** | **616** |

## ஒப்பந்த நியமனங்கள்

| | | |
|---|---|---|
| 1. | பிரதமர் அலுவலகம் | 1 |
| 2. | நீதி அமைச்சு | 10 |
| 3. | கமத்தொழில் அமைச்சு | 5 |
| 4. | கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 2 |
| 5. | மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சு | 2 |
| 6. | தொழிட்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சு | 1 |
| 7. | அரச வளங்கள் மற்றும் தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு | 1 |
| 8. | துறைமுகங்கள் மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு | 1 |
| | **மொத்தம்** | **23** |

## வினைத்திறன் காண் தடை தாண்டல் தொடர்பான தீர்மானங்கள்

| | | |
|---|---|---|
| 1. | கல்வி அமைச்சு | 8 |
| 2. | நீதி அமைச்சு | 13 |
| 3. | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 3 |
| 4. | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 7 |
| 5. | நிர்மாணத்துறை,பொறியியற் சேவைகள் வீமைப்பு மற்றும் பொ.வ.அமைச்சு | 8 |
| 6. | கமத் தொழில் அமைச்சு | 62 |
| 7. | கமநல சேவை மற்றும் வன சீவராசிகள் அமைச்சு | 7 |
| 8. | தேசிய மொழிகள் மற்றும் சமூக ஒருமைப்பாட்டு அமைச்சு | 4 |
| 9. | தேசிய மரபுரிமைகள் அமைச்சு | 2 |
| 10. | போக்குவரத்து அமைச்சு | 27 |
| 11. | சுற்றாடல் அமைச்சு | 5 |
| 12. | புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சு | 5 |
| 13. | நிதி, திட்டமிடல் அமைச்சு | 19 |
| 14. | இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 1 |
| 15. | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 10 |
| 16. | அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 913 |
| 17. | நீர்பாசன அமைச்சு | 11 |
| 18. | அதிபர் சேவை | 3 |
| 19. | இலங்கை தொழில்நுட்ப சேவை | 15 |
| 20. | சுகாதார அமைச்சு | 390 |
| 21. | புள்ளிவிபரவியலாளர் | 4 |
| 22. | உதவி தொழில் ஆணையாளர் | 4 |
| 23. | உதவி பொலிஸ் அத்தியட்சகர் | 1 |
| 24. | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 12 |
| 25. | தபால் சேவை அமைச்சு | 1 |
| 26. | மீன்பிடி மற்றும் நீரியல் வள அமைச்சு | 2 |
| 27. | மிருக வைத்தியர்கள் | 9 |
| 28. | வெளிநாட்டு சேவை | 8 |
| 29. | இலங்கை விஞ்ஞான சேவை | 4 |
| 30. | இலங்கை கல்வி நிருவாக சேவை | 30 |
| 31. | இலங்கை பொறியியலாளர் சேவை | 5 |

| | | |
|---|---|---|
| 32. | இலங்கை திட்டமிடல் சேவை | 4 |
| 33. | இலங்கை தொழில்நுட்ப கல்வி சேவை | 10 |
| 34. | இலங்கை நிருவாக சேவை | 4 |
| 35. | இலங்கை நில அளவையாளர் சேவை | 1 |
| 36. | இலங்கை ஆசிரிய கல்வியியலாளர் சேவை | 25 |
| 37. | இலங்கை தகவல் தொழில்நுட்ப சேவை | 1 |
| | **மொத்தம்** | **1638** |

## பதில் கடமை மற்றும் கடமை நிறைவேற்றல் நியமனங்கள்

| | | |
|---|---|---|
| 1. | மேலதிக செயலாளர் | 10 |
| 2. | மேலதிக பணிப்பாளர் | 1 |
| 3. | மேலதிக பணிப்பாளர் நாயகம் | 5 |
| 4. | கல்வி அமைச்சு | 1 |
| 5. | நீதி அமைச்சு | 2 |
| 6. | நிர்மாணத்துறை,பொறியியல் சேவைகள்,வீடமைப்பு மற்றும் பொ.வ. அமைச்சு | 6 |
| 7. | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 1 |
| 8. | தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சு | 18 |
| 9. | கமத்தொழில் அமைச்சு | 21 |
| 10. | மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சு | 4 |
| 11. | சனாதிபதி அலுவலகம் | 3 |
| 12. | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | 4 |
| 13. | மதிப்பீட்டுத் திணைக்களம் | 1 |
| 14. | தபால் சேவை அமைச்சு | 34 |
| 15. | சுதேச மருத்துவத்துறை அமைச்சு | 1 |
| 16. | மீன்பிடி மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு | 5 |
| 17. | கால்நடை வள மற்றும் கிராமிய சமூக அபிவிருத்தி அமைச்சு | 2 |
| 18. | சுற்றாடல் மற்றும் புதுப்பிக்கத்தக்க சக்திவள அமைச்சு | 3 |
| 19. | புனர்வாழ்வு மற்றும் சிறைச்சாலை மறுசீரமைப்பு அமைச்சு | 12 |
| 20. | நிதி, திட்டமிடல் அமைச்சு | 201 |
| 21. | இளைஞர் விவகார மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சு | 2 |
| 22. | இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களம் | 3 |
| 23. | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 4 |
| 24. | அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 258 |
| 25. | கணக்காய்வாளர் சேவை | 1 |
| 26. | கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் | 1 |
| 27. | சுகாதார அமைச்சு | 6 |
| 28. | புத்தசாசன மற்றும் மத அலுவல்கள் அமைச்சு | 2 |
| | **மொத்தம்** | **612** |

## விடுவித்தல்

| | | |
|---|---|---|
| 1. | மேலதிக செயலாளர் | 5 |
| 2. | கல்வி அமைச்சு | 29 |
| 3. | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 1 |
| 4. | கமத்தொழில் அமைச்சு | 1 |
| 5. | நிதி,திட்டமிடல் அமைச்சு | 6 |
| 6. | அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு | 72 |
| 7. | நீர்பாசன அமைச்சு | 7 |
| 8. | சுகாதார அமைச்சு | 40 |
| | **மொத்தம்** | **161** |

## சேவையிலிருந்து விலகல்

| | | |
|---|---|---|
| 1. | இலஞ்சம், ஊழல் பற்றிய சாத்துதல்ளை புலனாய்வு செய்யும் ஆணைக்குழு | 2 |
| 2. | கமத்தொழில் அமைச்சு | 1 |
| 3. | இலங்கை மருத்துவ சேவை | 23 |
| 4. | இலங்கை விஞ்ஞான சேவை | 2 |
| 5. | இலங்கை பொறியியல் சேவை | 9 |
| 6. | இலங்கை தொழில்நுட்பக் கல்விச் சேவை | 1 |
| 7. | இலங்கை நிருவாக சேவை | 4 |
| 8. | இலங்கை நில அளவையாளர் சேவை | 1 |
| | **மொத்தம்** | **43** |

## பதவிகளுக்கு நியமித்தல்

| | | |
|---|---|---|
| 1. | மேலதிக சுங்கப் பணிப்பாளர் நாயகம் | 5 |
| 2. | மேலதிக பணிப்பாளர் | 3 |
| 3. | மேலதிக பணிப்பாளர் நாயகம் | 4 |
| 4. | மேலதிக வனப் பாதுகாப்பு நாயகம் | 1 |
| 5. | மேலதிக செயலாளர் | 33 |
| 6. | பிரதி மன்றாடியார் அதிபதி | 3 |
| 7. | சுங்கப் பணிப்பாளர் | 11 |
| 8. | கல்வி அமைச்சு | 1 |
| 9. | அனர்த்த முகாமைத்துவ அமைச்சு | 5 |
| 10. | காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சு | 0 |
| 11. | உயர் கல்வி அமைச்சு | 1 |
| 12. | சிறு தொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சு | 1 |
| 13. | கமத்தொழில் அமைச்சு | 1 |
| 14. | கமநல சேவைகள் மற்றும் வன சீவராசிகள் அமைச்சு | 1 |
| 15. | மக்கள் தொடர்பாடல் மற்றும் தகவல் அமைச்சு | 0 |
| 16. | சனாதிபதி அலுவலகம் | 1 |
| 17. | நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு அமைச்சு | 2 |
| 18. | சிரேஷ்ட அரச சட்டவாதி | 7 |
| 19. | சிரேஷ்ட உதவிச் செயலாளர் | 15 |

| | | |
|---|---|---|
| 20. | மதிப்பீட்டுத் திணைக்களம் | 1 |
| 21. | உள்நாட்டு இறைவரிச் சேவை ஆணையாளர் | 68 |
| 22. | பிரதி மன்றாடியார் அதிபதி | 6 |
| 23. | சட்ட வரைஞர் திணைக்களம் | 2 |
| 24. | கணக்காய்வுச் சேவை | 0 |
| 25. | அதிபர் சேவை | 70 |
| 26. | விசேட வைத்திய நிபுணர் | 96 |
| 27. | இலங்கை தொழில்நுட்பக் கல்வி சேவை | 3 |
| 28. | சுகாதார அமைச்சு | 2 |
| 29. | சிரேஷ்ட மருத்துவ நிருவாக சேவை | 1 |
| | **மொத்தம்** | **344** |

## உள்ளீர்ப்பு

| | | |
|---|---|---|
| 1. | தகவல் தொழில்நுட்ப மற்றும் தொடர்பாடல் சேவை | 1 |
| 2. | உள்நாட்டு இறைவரிச் சேவை | 750 |
| 3. | பிரதி சுங்கப் பணிப்பாளர் | 5 |
| 4. | பாதுகாப்பு மற்றும் நகர அபிவிருத்தி அமைச்சு | 11 |
| 5. | சுங்கத் திணைக்களம் | 686 |
| 6. | நீர்பாசனத் திணைக்களம் | 11 |
| 7. | இலங்கை ஆயுர்வேத மருத்துவ சேவை | 6 |
| 8. | இலங்கை பொறியியலாளர் சேவை | 1 |
| | **மொத்தம்** | **1471** |

## 5.3 ஒழுக்காற்றுப் பிரிவு

மத்திய அரசாங்கத்திற்குரிய பதவிநிலை உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XLVIII இல் முதலாவது அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களுடன் தொடர்புடைய ஒழுக்கக் கட்டுப்பாட்டுத் தத்துவங்கள் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் அமுல் செய்யப்பட்டுள்ளது. இதற்கு மேலதிகமாக, அரசாங்க உத்தியோகத்தர்கள் தொடர்பில் தாபன விதிக் கோவையின் அத்தியாயம் XLVIII இல் இரண்டாவது அட்டவணையில் காட்டப்பட்டுள்ள குற்றங்களுடன் தொடர்புடைய மேன்முறையீட்டு அதிகாரியாகவும் அரசாங்க சேவை ஆணைக்குழு செயற்படுகின்றது. அரசாங்க சேவை ஆணைக்குழுவிடமுள்ள மேற்சொன்ன தத்துவங்களின் பிரகாரம் அந்தந்த சந்தர்ப்பத்தில் தேவையான பணிப்புரைகளை வழங்கும் பொருட்டு ஒழுக்காற்றுப் பிரிவு ஆணைக்குழுவிற்கு அவதானிப்புகளையும் சிபாரிசுகளையும் வழங்கி தேவையான ஒத்துழைப்பை வழங்கும். இப் பிரிவு கீழ் விபரிக்கப்பட்ட பணியாட் தொகுதியை உள்ளடக்கியதாக செயற்படுகின்றது.

சிரேஷ்ட உதவிச் செயலாளர் - 01
உதவிச் செயலாளர் - 05
முகாமைத்துவ உதவியாளர் - 15

### 5.3.1 ஒழுக்காற்றுப் பிரிவின் பணிகள்

திணைக்களத் தலைவர்களூடாக அல்லது அமைச்சுச் செயலாளர்கள் ஊடாக மேற்கொள்ளப்படுகின்ற ஆரம்ப விசாரணைகளுடன் தொடர்புடையதாக மத்திய அரசிற்குரிய அனைத்து பதவிநிலை உத்தியோகத்தர்களினதும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள் கையளிப்பு தொடர்பான 1733/52 ஆம் இலக்க 2011.11.25 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் வரும் உத்தியோகத்தர்களினதும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் இப் பிரிவினால் மேற்கொள்ளப்படுகின்றது. ஆரம்ப புலனாய்வு அறிக்கை ஒழுக்காற்றுப் பிரிவிற்கு கிடைக்கப் பெற்றதன் பின்னர் அவ்வறிக்கையை ஆராய்ந்து உரிய அவதானிப்புகளைப் பூர்த்தி செய்து கொண்டதன் பின்னர் பொறுப்புக் கூற வேண்டிய உத்தியோகத்தர்களுக்கு எதிராக குற்றப் பத்திரிகைகளை விநியோகித்தல் அல்லது விநியோகிக்காதிருத்தல் தொடர்பில் பொருத்தமான தீர்மானம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் எடுக்கப்படும். குற்றப் பத்திரிகையொன்றைப் வழங்குவதற்கு தீர்மானிக்கப்படும் பட்சத்தில் அக்குற்றப் பத்திரிகையை உரிய உத்தியோகத்தருக்கு அமைச்சுச் செயலாளரூடாக அல்லது திணைக்களத் தலைவரூடாக ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமென்பதுடன், அக் குற்றப் பத்திரிகைக்கு குற்றம் சுமத்தப்பட்ட உத்தியோகத்தரினால் முன்வைக்கப்படுகின்ற பதில் மற்றும் அது தொடர்பில் உரிய திணைக்களத் தலைவரினதும் அமைச்சுச் செயலாளரினதும் அவதானிப்புகளையும் சிபாரிசுகளையும் கருத்திற் கொண்டு முறையான ஒழுக்காற்று விசாரணையொன்றை நடாத்துவதற்கு அல்லது நடாத்தாமலிருப்பதற்கு தீர்மானிக்கப்படும்.

முறையான ஒழுக்காற்று விசாரணையொன்றை நடாத்துவதற்கு தீர்மானிக்கப்படும் பட்சத்தில் அதற்காக அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் பேணப்பட்டுவருகின்ற விசாரணை உத்தியோகத்தர் குழாமிலிருந்து பொருத்தமான உத்தியோகத்தரொருவரை விசாரணை உத்தியோகத்தராக நியமித்து அம் முறையான ஒழுக்காற்று விசாரணையை நடாத்துமாறு பணிக்கப்படும். முறையான ஒழுக்காற்று விசாரணையொன்றை நடாத்தாதிருப்பதற்கு தீர்மானிக்கப்படும் பட்சத்தில் குற்றம் சுமத்தப்பட்ட உத்தியோகத்தரினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள பதிலையும் அது தொடர்பில் உரிய திணைக்களத் தலைவரினதும் அமைச்சுச் செயலாளரினதும் அவதானிப்புகளையும் சிபாரிசுகளையும் கருத்திற் கொண்டு குற்றம் சுமத்தப்பட்ட உத்தியோகத்தரை அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிப்பதற்கு அல்லது தகுந்ததொரு தண்டணையை விதிப்பதற்கு தீர்மானிக்கப்படும்.

முறையான ஒழுக்காற்று விசாரணையொன்று நடத்தப்பட்டிருப்பின் அவ் விசாரணை அறிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் கிடைக்கப் பெற்றதன் பின்னர் அம் முறையான ஒழுக்காற்று விசாரணையின் போது முன் வைக்கப்பட்ட அனைத்து வாய்மூல, எழுத்துமூல சாட்சியங்களையும் குற்றம் சாட்டப்பட்ட அலுவலரின் நிருவாக அதிகாரியின் சிபாரிசுகளையும் கருத்திற் கொண்டு குற்றம் சுமத்தப்பட்ட உத்தியோகத்தரை அனைத்து குற்றச்சாட்டுகளிலிருந்தும் விடுவிப்பதற்கு அல்லது ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குற்றச் சாட்டுகளுக்கு குற்றவாளியாக்கப்படுவதற்கான தகுந்ததொரு ஒழுக்காற்றுக் கட்டளையை ஆணைக்குழு விதிக்கும்.

மேலும் ஒழுக்காற்று நடைமுறையின் ஒரு பகுதியாக உத்தியோகத்தரொருவரை வேலை இடை நிறுத்தத்திற்கு உட்படுத்துவதற்கு அல்லது அவ்வாறு வேலை இடைநிறுத்தத்திற்கு உட்பட்டிருக்கும் உத்தியோகத்தரொருவரை மீளச் சேவையில் அமர்த்துவதற்கு அல்லது கட்டாய விடுமுறையில் அனுப்புவதற்கு அல்லது முற்றுப்பெறாத ஒழுக்காற்று விடயங்கள் இருக்கும் போது உரிய உத்தியோகத்தரை ஓய்வு பெறச் செய்வதாயின் அவ்வாறு ஓய்வு பெறச் செய்தலை ஓய்வூதியப் பிரமாணக் கோவையின் 12 ஆம் பிரிவின் கீழ் மேற்கொள்வதற்கு தீர்மானிக்கப்படும்.

மேற்சொன்ன நடவடிக்கைகளுக்கு மேலதிகமாக சேவை வெறிதாக்கல் கட்டளைக்கு எதிராக பதவிநிலை உத்தியோகத்தர்களினாலும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தத்துவங்கள் கையளிப்பு தொடர்பான 1733/52 ஆம் இலக்க 2011.11.25 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் விடயப் பரப்பிற்குள் வரும் உத்தியோகத்தர்களினாலும் சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகளையும் அதிலுள்ள விடயங்களையும் அலுவலரின் நிருவாக அதிகாரியின் சிபாரிசுகளையும் கருத்திற் கொண்டு, அவ் உத்தியோகத்தர்களை பொருத்தமானவாறு மீளச் சேவையில் அமர்த்துவதற்கு/அமர்த்தாதிருப்பதற்குத் தீர்மானிக்கப்படும்.

மேலும், ஆணைக்குழுவினால் விதிக்கப்படுகின்ற ஒழுக்காற்றுக் கட்டளைகளுக்கு அல்லது அவ்வாறான ஒழுக்காற்று நடவடிக்கைகள் தொடர்பான தீர்மானங்களுக்கு எதிராக உயர் நீதிமன்றத்திற்கும் நிருவாக மேன்முறையீட்டு நியாய சபைக்கும் சமர்ப்பிக்கப்படுகின்ற மேன்முறையீடுகளும், மனித உரிமைகள் ஆணைக்குழு, பாராளுமன்ற பொது மனுக்குழு, முறைகேள் உத்தியோகத்தர் (ஒம்புட்ஸ்மன்) ஆகியோருக்கு முன்வைக்கப்படுகின்ற மேன்முறையீடுகள் தொடர்பிலும் பொருத்தமானவாறு நடவடிக்கை எடுக்கப்படும்.


ஒழுக்காற்றுப் பிரிவிற்குக் கிடைக்கும் அனைத்து ஆவணங்கள் தொடர்பிலும் மிகவும் விரிவாக விடயங்களை ஆராய்ந்து பக்கச் சார்பற்ற தீர்மானங்களை எடுப்பதற்காக சிக்கலற்ற விதத்தில் அவ் விடயங்களை ஆணைக்குழுவிடம் சமர்ப்பிப்பது ஒழுக்காற்றுப் பிரிவின் பணியாகும்.

### 5.3.2 ஒழுக்காற்றுப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு- 2013 சனவரி 01 ஆம் திகதி முதல் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரை

| | விடயம் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | குற்றப் பத்திரிகைகளை வழங்குதல் | 66 |
| 2. | குற்றப் பத்திரிகைகளில் திருத்தம் செய்தல் | 19 |
| 3. | குற்றச்சாட்டுகளிலிருந்து விடுவித்தல் | 22 |
| 4. | சேவையிலிருந்து நீக்குதல் | 04 |
| 5. | பிற ஒழுக்காற்றுக் கட்டளைகள் | 42 |
| 6. | மீளச் சேவையில் அமர்த்தல் | 25 |
| 7. | மேன்முறையீடுகளை நிராகரித்தல் | 44 |
| 8. | ஓய்வூதியப் பிரமாணக் கோவையின் 12 ஆம் பிரிவின் கீழ் ஒய்வுபெறச் செய்தல் | 20 |
| 9. | கட்டாய விடுமுறையில் அனுப்புதல் | 02 |
| 10. | வேலை இடைநிறுத்தம் செய்தல் | 14 |
| 11. | ஒழுக்காற்று விசாரணை உத்தியோகத்தர்களை நியமித்தல் | 107 |

| | | |
|---|---|---|
| 12. | ஒழுக்காற்றுக் காரணிகள் மீது செய்யப்பட்ட ஓய்வுபெறுகையை சாதாரண ஓய்வுபெறுகையாக மாற்றுதல் | 02 |
| 13. | சேவையிலிருந்து ஓய்வு பெறச் செய்தல் | 04 |
| 14. | பிற பொதுவான கட்டளைகள் | 173 |
| | **மொத்தம்** | **544** |

அட்டவணை இல. 04




படம் 03

2013.01.01 தொடக்கம் 2013.12.31 வரை நடவடிக்கைகள் மேற்னொள்ளப்பட்ட உயர் நீதிமன்ற வழக்குகள், மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள், நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை வழக்குகள் கீழே தரப்படுகின்றன.

| | |
|---|---|
| உயர் நீதிமன்ற வழக்குகள் | - 27 |
| மேன்முறையீட்டு நீதிமன்ற வழக்குகள் | - 17 |
| நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை மேன்முறையீடுகள் | - 94 |

### 5.3.3 ஒழுக்காற்றுப் பிரிவின் செயலாற்றுகையை அதிகரிப்பதற்கு எடுக்கப்பட்ட புதிய முன்னெடுப்புக்கள்

ஒழுக்காற்றுப் பிரிவினது பணிகளின் வினைத்திறனை அதிகரிப்பதற்காக உத்தியோகத்தர்கள் ஒன்றுகூடி கலந்துரையாடல்களை நடாத்தி அது தொடர்பாக செயலாளரையும் அறிவூட்டி பின்வரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

I. 2011.08.18 ஆம் திகதி தொடக்கம் 05 குழுக்களினால் மேற்கொள்ளப்பட்டு வந்த பணிகள் 2013.09.10 ஆம் திகதியிலிருந்து 03 குழுக்களினால் மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டு அவை A, B, C என பெயரிடப்பட்டன.
II. பிரிவின் மாதாந்த கூட்டத்தை நடாத்தி அன்றாட கடமைகளை நிறைவேற்றும் போது எழுகின்ற பிரச்சினைகளை கலந்துரையாடல்.
III. முகாமைத்துவ ஒழுங்கமைப்பை இற்றைப்படுத்துவதற்கு தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுடன் கலந்துரையாடல்.

IV. கோவைகள் வைக்கப்பட்டுள்ள அலுமாரிகளுக்கு குறியீட்டு எண்களை வழங்கல்.
V. நிறைவு செய்யப்படவேண்டியுள்ள ஒவ்வொரு பணிகள் தொடர்பாகவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய விதத்தை குறிப்பிடும் கால எல்லையை வகுத்தல்.
VI. பதிவேட்டு அறையிலுள்ள பழைய கோவைகளை அப்புறப்படுத்தல் மற்றும் தேவையான தகவல்களை கணினிமயப்படுத்தல்.

## 5.4 மேன்முறையீட்டுப் பிரிவு

அரசியலமைப்பின் 58(1) உறுப்புரையின் மூலம் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தத்துவங்கள் கையளிக்கப்பட்டுள்ள குழுவொன்றினால் அல்லது உத்தியோகத்தரொருவரினால் செய்யப்படுகின்ற கட்டளை காரணமாக அதிருப்திக்குள்ளான எவரேனும் உத்தியோகத்தரொருவருக்கு அக் கட்டளைக்கு எதிராக அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு மேன்முறையீடொன்றைச் செய்யும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

அதேபோன்று 58(2) உறுப்புரையினால் அவ்வாறான மேன் முறையீடொன்று கிடைக்கப்பெற்ற போது அது தொடர்பில் விடயங்களை ஆராய்ந்து பார்த்து அக் கட்டளையை இரத்துச் செய்வதன் மூலமோ அல்லது மாற்றுவதன் மூலமோ அரசாங்க உத்தியோகத்தரொருவருக்கு நிவாரணம் வழங்குவதற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவிற்கு அதிகாரமுண்டு. இவ் ஏற்பாடுகளுக்கு ஏற்றவாறு அரச உத்தியோகத்தர்களின் பெரும் எண்ணிக்கையிலான மேன்முறையீடுகள் அரசாங்க சேவை ஆணைக்குழுவிடம் தொடர்ந்தும் முன்வைக்கப்படுகின்றன. இம் மேன்முறையீடுகள் தொடர்பில் செயற்படும் இப் பிரிவு கீழக் காணும் பணியாட் தொகுதியைக் கொண்டு காணப்படுகின்றது.

| | |
|---|---|
| சிரேஷ்ட உதவிச் செயலாளர் | - 01 |
| உதவிச் செயலாளர் | - 06 |
| முகாமைத்துவ உதவியாளர் | - 13 |

### 5.4.1 மேன்முறையீட்டுப் பிரிவின் பணிகள்

அமைச்சரவையினால் குறிப்பாக பணிக்கப்பட்டுள்ளதற்கு இணங்க அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் 2011.11.25 ஆம் திகதிய 1733/52 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியின் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்களின் நியமனம், பதவியுயர்வு, இடமாற்றம், ஒழுக்காற்று நடவடிக்கை, சேவையிலிருந்து நீக்குதல் முதலான தத்துவங்கள்கள் அரசியலமைப்பின் 57 ஆவது உறுப்புரையின் பிரகாரம் கையளிக்கப்பட்டிருக்கின்றன.


மேலே காட்டப்பட்ட தத்துவம் கையளிக்கப்பட்ட அதிகாரியொருவரின் கட்டளையினால் அதிருப்திக்குள்ளான அரச உத்தியோகத்தரொருவருக்கு, அரசியலமைப்பின் 58(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், எழுத்துமூல மேன்முறையீடொன்றை ஆணைக்குழுவிடம் முன்வைப்பதற்கு உரிமை உண்டு என்பதுடன், இவ்வாறு முன்வைக்கப்படுகின்ற மேன்முறையீடுகள் தொடர்பில் மேன்முறையீட்டுப் பிரிவு நடவடிக்கை மேற்கொள்ளும்.

இவற்றிற்கு மேலதிகமாக, மேற்சொன்ன பணிகளுடன் தொடர்புடைய ஆணைக்குழுவின் தீர்மானமொன்றிற்கு எதிராக நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையிடம் முன்வைக்கப்படுகின்ற மேன்முறையீடுகள் தொடர்பிலும் உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்படுகின்ற வழக்குகள் தொடர்பிலும் இப் பிரிவு நடவடிக்கை மேற்கொள்ளும்.

### 5.4.2 மேன்முறையீட்டுப் பிரிவின் முன்னேற்ற மீளாய்வு- 2013 சனவரி 01 ஆம் திகதி முதல் 2013 டிசம்பர் 31 ஆம் திகதி வரை

| | விடயம் | மொத்தம் |
|---|---|---|
| 1 | 2013 ஆம் வருடத்தில் கிடைக்கப்பெற்ற மேன்முறையீடுகள் | 2259 |
| 2 | அறிக்கை கிடைக்கப்பெறாத மேன்முறையீடுகள் | 1648 |
| 3 | அறிக்கை கிடைக்கப் பெற்று செயற்பட்டுக் கொண்டிருக்கும் மேன்முறையீடுகள் | 596 |
| 4 | விசாரணை முடிக்கப்பட்ட மேன்முறையீடுகளின் எண்ணிக்கை | 1577 |
| 5 | குறித்த காலப்பகுதியில் விசாரணையிலிருந்த நீதிமன்ற வழக்குகள் | 39 |
| 6 | குறித்த காலப்பகுதியில் விசாரணையிலிருந்த நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை வழக்குகளின் எண்ணிக்கை | 184 |
| 7 | பொது மனுக்குழு விசாரணைகளின் எண்ணிக்கை | 19 |

அட்டவணை இல. 05




படம் 04

### 5.4.3 2013 ஆம் வருடத்தில் மேன்முறையீட்டுப் பிரிவின் பணிகள் தொடர்பான பொது மீளாய்வு

I. வருடத்தின் நடுப்பகுதியில் சில உத்தியோகத்தர்கள் இடமாற்றம் பெற்றுச் சென்றனர். அத்தோடு சிலர் ஓய்வுபெற்றனர். அவ்வாறே இன்னும் சிலர் பிற பதவிகளில் கடமைகளைப் பொறுப்பேற்பதற்காக வேண்டி விடுவிக்கப்பட்டனர். எனவே ஆளணி தொடர்பான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க நேரிட்டது. அது 2013 ஆம் வருடத்தின் இறுதி வரை அவ்வாறே தொடர்ந்திருந்தது. ஆயினும் எஞ்சிய ஆளணியினரின் மிகுந்த அர்ப்பணிப்பும் வினைத்திறனும் காரணமாகவே மேற்படி செயலாற்றுகை மட்டத்தை அடைய முடிந்தது.

II. வருடாந்த இடமாற்றங்களுடன் தொடர்புடைய மேன்முறையீடுகள் கிடைக்கப்பெறும் முன்னர் அம்மேன்முறையீடுகள் தொடர்பான தகவல்களை சேகரிப்பதற்கு படிவமொன்று தயாரிக்கப்பட்டது. அப்படிவத்திற்கு அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீரம் பெறப்பட்டு இணைந்த சேவைகள் பணிப்பாளர் நாயகத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது. எனவே முன்னைய வருடத்துடன் ஒப்பிடும் போது இடமாற்ற மேன்முறையீடுகள் தொடர்பாக நடவடிக்கைகளை மேற்கொள்வதில் சிரமம் ஏற்படவில்லை. இந்த நடைமுறை முன்னைய வருடத்தில் இனம் காணப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கான ஒரு அனுகுமுறையாகவே பயன்படுத்தப்பட்டது.

III. பிரிவின் செயற்பாடுகளை மிகவும் சீறான முறையில் மேற்கொள்வதற்கும் அரசாங்க சேவை ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் அறிக்கைகளை ஒழுங்குபடுத்தி காலக்கிரம அடிப்படையில் அவற்றை சமர்ப்பிப்பதற்காகவும் கிடைக்கப்பெற்ற கோவைகளை ஓரிடத்தில் ஒன்று திரட்டி காலக் கிரம அடிப்படையில் அவற்றுக்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும் திட்டமிடப்பட்டது. இந்த நடைமுறை 2013 ஆம் வருடத்தின் செப்டம்பர் மாதத்திலிருந்து ஆரம்பிக்கப்பட்டது.

## 5.5 நிருவாகப் பிரிவு

அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தின் பொதுவான நிருவாகப் பணிகள் நிருவாகப் பிரிவிற்கு ஒப்படைக்கப்பட்டுள்ளன. இப் பிரிவிற்குப் பொறுப்பாக மேலதிக செயலாளர் (நிருவாகம்) செயற்படுகின்றார்.

நிருவாகப் பிரிவினால் பின்வரும் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

- ஆணைக்குழு அலுவலகத்தின் ஒட்டுமொத்த நிருவாகம்.
- ஆணைக்குழு அலுவலகத்தின் மனித வள முகாமைத்துவம்.
- தகவல் முகாமைத்துவப் பணிகள்.

இப் பிரிவின் பணியாட் தொகுதிக் கட்டமைப்பு வருமாறு:

| | |
|---|---|
| மேலதிக செயலாளர் | - 01 |
| நிருவாக உத்தியோகத்தர் | - 01 |
| மொழிபெயர்ப்பாளர் | - 03 |
| முகாமைத்துவ உதவியாளர் | - 10 |

தகவல் தொழில்நுட்ப அலுவலர் - 01
தகவல் தொழில்நுட்ப உதவியாளர் - 01

### 5.6 கணக்குப் பிரிவு

இப் பிரிவு ஆணைக்குழு அலுவலகத்திற்காக தடங்கலற்ற நிதித் தகவல் முறைமையையும் முகாமைத்துவ முறைமையையும் உறுதி செய்த வண்ணம் நிதிச் சேவைகளை வழங்குகின்றது. இதற்காக பின்வரும் பணிகள் நிறைவேற்றப்படுகின்றன.

- ஆணைக்குழு அலுவலகத்திற்காக நிதித் திட்டங்களை வகுத்தலும் அமுல் செய்தலும்.
- பொருட்களையும் சேவைகளையும் வழங்கல்.
- நிலையான சொத்துக்களின் முகாமைத்துவம்.
- நிதியியல் விடயங்கள் தொடர்பான வழிகாட்டல்களும், ஆலோசனைகளும்.
- பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரான செயலாளருக்கு நிதிப் பிரிவின் நடவடிக்கைகள் தொடர்பில் இற்றைப்படுத்தப்பட்ட தகவல்களை வழங்கல்.
- பிரிவுகளுக்கிடையில் நிதி நடவடிக்கைகளை ஒருங்கிணைத்தல்.
- கொள்முதல் நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

இப் பிரிவு கீழ்க் காணும் பணியாட் தொகுதியைக் கொண்டுள்ளது.

கணக்காளர் - 01
முகாமைத்துவ உதவியாளர் - 05

## 06. நிதி ஒதுக்கீடு

2013.01.01 தொடக்கம் 2013.12.31 வரை அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகத்தின் செலவினப் பொழிப்பு வருமாறு:

| | நிதி ஒதுக்கீடு | செலவினம் | சேமிப்பு |
|---|---|---|---|
| மீண்டெழும் | 114,609,344.00 | 114,573,641.44 | 35,702.56 |
| மூலதனம் | 9,078,500.00 | 8,234,332.83 | 844,167.17 |
| கூட்டுத்தொகை | 123,687,844.00 | 122,807,974.27 | 879,869.73 |

*அட்டவணை இல. 06*

## 07. பணியாட் தொகுதி

### 7.1 நிறுவனக் கட்டமைப்பு

நிறுவனக் கட்டமைப்பு பின்னிணைப்பு 03 ஐப் பார்க்கவும்.

## 7.2 பணியாட் தொகுதியின் அமைப்பு

மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதி, தவிசாளர் உள்ளிட்ட 09 உறுப்பினர்களுடன் 195 உத்தியோகத்தர்களைக் கொண்டதாகக் காணப்பட்டதுடன், இக் காலப்பகுதியில் அரசாங்க சேவை ஆணைக்குழு அலுவலகம் உண்மையிலேயே சேவையில் ஈடுபடுத்திய பணியாட் தொகுதி உத்தியோகத்தர்கள் 146 ஆகும். இதன் பணியாட் தொகுதி கட்டமைப்பு தொடர்பான விபரம் வருமாறு:

**பணியாட் தொகுதி விபரம்**

| | |
|---|---|
| செயலாளர் | - 01 |
| மேலதிக செயலாளர் | - 02 |
| சிரேஷ்ட உதவிச் செயலாளர் | - 05 |
| உதவிச் செயலாளர் | - 23 |
| கணக்காளர் | - 01 |
| நிருவாக உத்தியோகத்தர் | - 02 |
| மொழிபெயர்ப்பாளர் | - 03 |
| தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உத்தியோகத்தர் | - 01 |
| தகவல் தொழில்நுட்ப உதவியாளர் | - 01 |
| அரச முகாமைத்துவ உதவியாளர் | - 74 |
| சாரதிகள் | - 13 |
| அலுவலக உதவியாளர் | - 20 |
| **மொத்தம்** | **- 146** |

## 7.3 பணியாட் தொகுதிக்கான பயிற்சி நடவடிக்கைகள்

ஆணைக்குழு அலுவலக உத்தியோகத்தர்களின் விடய அறிவு, மொழித் தேர்ச்சி, தொழில்நுட்ப அறிவு, விசேட முகாமைத்துவ ஆற்றல் முதலானவற்றை விருத்தி செய்வதற்காக பல்வேறு பயிற்சி நிகழ்ச்சிகளில் பங்குபற்றும் வாய்ப்புகளை, வழமைபோல் 2013 ஆம் வருடத்திலும் உத்தியோகத்தர்களுக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

| தரம் | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|
| பதவிநிலை உத்தியோகத்தர் | 13 |
| முகாமைத்துவ உதவியாளர் | 27 |

*அட்டவணை இல. 07*

## 08. 2013 ஆம் வருடத்தில் ஒவ்வொரு பிரிவினாலும் விளக்கங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள வழக்குகளின் எண்ணிக்கை

| பிரிவு | உயர் நீதிமன்றம் | மேன்முறையீட்டு நீதிமன்றம் | நிருவாக மேன்முறையீட்டு நியாய சபை |
|---|---|---|---|
| தாபனம் | 32 | 01 | 08 |
| நியமனம் | 75 | 16 | 144 |
| ஒழுக்காற்று | 27 | 17 | 94 |
| மேன்முறையீடு | 36 | 10 | 262 |
| **கூட்டுத்தொகை** | **170** | **44** | **508** |

*அட்டவணை இல. 08*

## 09. ஆணைக்குழுக் கூட்டங்கள்

அரசாங்க சேவை ஆணைக்குழு 2013.01.01 தொடக்கம் 2013.12.31 வரையிலான மீளாய்வுக்குட்பட்ட காலப்பகுதியில் 120 கூட்டங்களை நடாத்தியுள்ளது.

## 10. நன்றி தெரிவிப்பு

மீளாய்வுக்குட்பட்ட வருடத்தில் அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் நிறைவேற்றப்பட்ட பெரும்பாலான மிக முக்கிய பணிகளின் போது சகல அமைச்சுச் செயலாளர்களும், திணைக்களத் தலைவர்களும் வழங்கிய ஒத்துழைப்பிற்கும் பங்களிப்பிற்கும் நன்றி கூறுவதோடு குறிப்பாக,

- சனாதிபதி செயலகம்
- அமைச்சரவை அலுவலகம்
- அரசாங்க நிருவாக மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சு
- நிதி, திட்டமிடல் அமைச்சு
- தேசிய சம்பள மற்றும் பதவியணி ஆணைக்குழு
- தகவல் தொழில்நுட்ப முகவராண்மை
- சட்டமா அதிபர் திணைக்களம்
- அரசாங்க சேவை ஆணைக்குழு பணியாட் தொகுதி உத்தியோகத்தர்கள் வழங்கிய ஒத்துழைப்பிற்கும் பங்களிப்பிற்கும் ஆணைக்குழு விசேடமாக நன்றி தெரிவித்துக் கொள்கின்றது.

| | |
|---|---|
| வித்தியாஜோதி வைத்திய கலாநிதி (திரு.) தயாசிறி பெர்ணாந்து | - தவிசாளர் |
| ஜனாதிபதி சட்டத்தரணி திரு. பாலித எம். குமாரசிங்ஹ | - அங்கத்தவர் |
| திருமதி சிறிமாவோ ஏ. விஜேரத்ன | - அங்கத்தவர் |
| திரு. எஸ்.சீ. மான்னப்பெரும | - அங்கத்தவர் |
| திரு. ஆனந்த செனவிரத்ன | - அங்கத்தவர் |
| திரு. என்.எச். பதிரண | - அங்கத்தவர். |
| திரு. எஸ். தில்லைநடராஜா | - அங்கத்தவர் |
| திரு. எம்.டீ.டபிள்யு. ஆரியவன்ச | - அங்கத்தவர் |
| திரு. ஏ.மொஹமட் நஹியா | - அங்கத்தவர் |

## பின்னிணைப்பு 01

## மீளாய்வுக்குரிய வருடத்தில் பதவிநிலை உத்தியோகத்தர்களினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மேன்முறையீடுகள்

### நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையிடம் முன்வைக்கப்பட்ட முறையீடுகள்

| 2013.01.01 திகதிக்கு முடிவுறாத நிலையிலிருந்தவை | 2013 ஆம் வருடத்தில் கிடைக்கப் பெற்றவை | 2013.12.31 ஆம் திகதிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த எண்ணிக்கை | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் உறுதி செய்யப்பட்டவை | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இரத்து செய்யப்பட்டவை | 2013.12.31 ஆம் திகதிக்கு முடிவுறாதவை |
|---|---|---|---|---|---|
| 108 | 126 | 234 | 16 | 18 | 200 |

### உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள்

| 2013.01.01 திகதிக்கு முடிவுறாத நிலையிலிருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 2013 ஆம் வருடத்தில் கிடைக்கப் பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | 2013.12.31 ஆம் திகதிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | உயர் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையும்அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையும் | உயர் நீதிமன்றத்தனால் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் இரத்து செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2013.12.31 ஆம் திகதிக்கு முடிவுறாத வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 61 | 41 | 102 | 29 | - | 73 |

## மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள்

| 2013.01.01 திகதிக்கு முடிவுறாத நிலையிலிருந்தவை | 2013 ஆம் வருடத்தில் கிடைக்கப் பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | 2013.12.31 ஆம் திகதிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தை உறுதி செய்த வழக்குகளின் எண்ணிக்கை | மேன்முறையீட்டுநீதிமன்றத்தனால் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் இரத்து செய்யப்பட்டு நிவாரணம் வழங்கப்பட்டவை | 2013.12.31 ஆம் திகதிக்கு முடிவுறாத வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| **26** | **7** | **33** | **4** | **-** | **29** |

- மேல் குறிப்பிடப்பட்ட மேன் முறையீடுகளுக்கு மேலதிகமாக 2013.01.01 ஆம் திகதியிலிருந்து 2013.12.31 ஆம் திகதி வரையில் நிருவாக விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளரிடம் (ஒம்புட்ஸ்மன்) முறையீடுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

- 2013.01.01 ஆம் திகதியிலிருந்து 2013.12.31 ஆம் திகதி வரையில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒரு முறைப்பாட்டுக்கு மனித உரிமைகள் ஆணைக்குழுவுக்கு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

- 2013.01.01 ஆம் திகதியிலிருந்து 2013.12.31 ஆம் திகதி வரையில் பொது மனுக்குழுவிடம் முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## பின்னிணைப்பு 02

**மீளாய்வுக்குரிய வருடத்தில் பதவிநிலை உத்தியோகத்தர்கள் அல்லாத அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்களுக்கு எதிராக முன்வைக்கப்பட்ட மேன்முறையீடுகள்**

**நிருவாக மேன்முறையீட்டு நியாய சபையிடம் முன்வைக்கப்பட்ட முறையீடுகள்**

| 2013.01.01 திகதிக்கு முடிவுறாத நிலையிலிருந்தவை | 2013 ஆம் வருடத்தில் கிடைக்கப் பெற்றவை | 2013.12.31 ஆம் திகதிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த எண்ணிக்கை | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் உறுதி செய்யப்பட்டவை | அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானம் இரத்து செய்யப்பட்டவை | 2013.12.31 ஆம் திகதிக்கு முடிவுறாதவை |
|---|---|---|---|---|---|
| 103 | 163 | 266 | 53 | 4 | 209 |

**உயர் நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள்**

| 2013.01.01 திகதிக்கு முடிவுறாத நிலையிலிருந்த வழக்குகளின் எண்ணிக்கை | 2013 ஆம் வருடத்தில் கிடைக்கப் பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | 2013.12.31 ஆம் திகதிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | உயர் நீதிமன்றத்தினால் தள்ளுபடி செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையும்அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்துக்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கையும் | உயர் நீதிமன்றத்தனால் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் இரத்து செய்யப்பட்ட வழக்குகளின் எண்ணிக்கை | 2013.12.31 ஆம் திகதிக்கு முடிவுறாத வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 20 | 16 | 36 | 7 | 0 | 29 |


## மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்குகள்

| 2013.01.01 திகதிக்கு முடிவுறாத நிலையிலிருந்தவை | 2013 ஆம் வருடத்தில் கிடைக்கப் பெற்ற வழக்குகளின் எண்ணிக்கை | 2013.12.31 ஆம் திகதிக்கு கிடைக்கப்பெற்ற மொத்த வழக்குகளின் எண்ணிக்கை | மேன்முறையீட்டு நீதிமன்றத்தினால் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானத்தை உறுதி செய்த வழக்குகளின் எண்ணிக்கை | மேன்முறையீட்டுநீதிமன்றத்தனால் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தீர்மானங்கள் இரத்து செய்யப்பட்டு நிவாரணம் வழங்கப்பட்டவை | 2013.12.31 ஆம் திகதிக்கு முடிவுறாத வழக்குகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| 4 | 6 | 10 | 1 | 2 | 7 |

- 2013.01.01 ஆம் திகதியிலிருந்து 2013.12.31 ஆம் திகதி வரையில் நிருவாக விடயங்கள் தொடர்பான பாராளுமன்ற ஆணையாளரிடம் (ஒம்புட்ஸ்மன்) எவ்வித முறைப்பாடுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை.
- மீளாய்வுக்குரிய காலப்பகுதியில் மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் எவ்வித முறைப்பாடுகளும் சமர்ப்பிக்கப்படவில்லை.
- 2013.01.01 ஆம் திகதியிலிருந்து 2013.12.31 ஆம் திகதி வரையில் பொது மனுக்குழுவிடம் 19 முறைப்பாடுகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

**பின்னிணைப்பு 03**

## நிறுவனக் கட்டமைப்பு
## அரசாங்க சேவை ஆணைக்குழு




குறிப்பு:

சி.உ.செ. - சிரேஷ்ட உதவிச் செயலாளர்
நி.உ - நிர்வாக உத்தியோகத்தர்
உ.செ - உதவிச் செயலாளர்
த.தொ.உ - தகவல் தொழில்நுட்ப உத்தியோகத்தர்